
கோகுலம்

GOKULAM

ஜனவரி '97 ரூ. 5.00






கோகுலம்

ஜனவரி 1997
மலர் : 14
இதழ் : 12



உயிர்களிடத்தில்
அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல்
வேணும் -
பாரதியார்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

அரையாண்டுத் தேர்வில் வெளுத்துக்கட்டி, தேர்வையே பயப்படுத்தி வைத்திருப்பீர்களே?

இந்த இதழில் நீங்கள் மிக ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த குழந்தைக் கவிஞர் அமரர்.அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியின் முடிவுகள் வெளியாகி, முதற் பரிசு பெற்ற கதையும் வந்துள்ளது. எத்தனை தொலைகாட்சிகளும், வீடியோக்களும் வந்தாலும்கூட மாணவர்களின் கற்பனையையும், படைக்கும் திறனையும் அழித்து விட முடியாது என்பதை இந்தப் போட்டி உணர வைத்துள்ளது. இதில் ஒரு சிறப்பு அம்சம். கடந்த போட்டியில் பரிசு பெற்ற ஒரு சிலர் இந்த முறையும் பரிசு பெற்றுள்ளார்கள்! அவர்களது படைப்பாற்றல் நன்கு நல்ல முறையில் வளர்ந்து இத்துறையில் மேன்மேலும் அரிய படைப்புகளைப் படைத்து உயர வாழ்த்துவோம்!

அடுத்த மாதம் உங்கள் கோகுலம் தனது 15வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கோகுலத்தை உங்கள் நண்பர்கள், உறவினர்களிடம் காட்டுங்கள். அவர்களையும் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள்.


இடமின்மையால் "கேட்கட்டுமா டாக்டர்?", "கேளுங்கள் சொல்லப்படும்", "உங்கள் நூலகம்" பகுதிகள் இடம் பெறவில்லை.

அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல், குடியரசுதின வாழ்த்துகள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



கோகுலம்

1997 ஜனவரி - இந்த இதழில்

படக்கதை

திக் திக் திக்... கதைகள்!




புத்தாண்டே வருக!

புதிய ஆண்டே வருக! புதுமை செய்ய வருக!
நிலமே மகிழ வருக! நிறைவாய் மலர்ந்து வருக!
இதயம் வாழ்த்த வருக! இனிமை என்றும் தருக!
வருக ஆண்டே வருக! வளமை வாழ்வில் தருக!

சென்ற ஆண்டின் தவற்றை செய்யா
திருக்க அருள்க!
சிறுவர் இனிமேல் நாங்கள் சிறப்பாய் வளர அருள்க!
குறைவிலா அன்பைப் பிறர்க்கு
கொடுத்து மகிழ அருள்க!
நலமாய் நாங்கள் வாழ நன்மை நாளும் அருள்க!

-பூங்கோதை கிருஷ்ணராஜ்

பயப்படுத்திப் பாஸ்! பக்கம் 19



வாசகர் பங்கேற்பு



குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி 1996 முடிவு!

பள்ளி மாணவர்களிடையே சிறுவர் இலக்கியம் படைக்கும் ஆற்றலும் திறமையும் உள்ளவர்களைக் கண்டுபிடித்து வெளிக் கொண்டு வந்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்தச் சிறுகதைப் போட்டி அறிவிக்கப்பட்டது. வந்த சிறுகதைகளைப் பரிசீலித்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுப்பது என்பது பெரிய சவாலாகவே இருந்தது. எத்தனை புதிய கதைக்களங்கள்! புதிய பிரச்னைகள்! இவைகளில் மூழ்கி பரிசீலித்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை கோகுலம் (கௌரவ) ஆசிரியருடன் சிறுவர் இலக்கியத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்று ரேடியோ அண்ணாவாகவும் இருந்த தொலைக்காட்சி வெ.நல்லதம்பி அவர்களும், நூற்றுக்கணக்கான சிறுவருடன் தினமும் பழகும் வாய்ப்பைப் பெற்று முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ள திருமதி வசந்தா (முதல்வர், சங்கர வித்யாஷ்ரமம், சென்னை-41) அவர்களும் ஏற்று நடுவர்களாக இருந்தனர்.



• நடுவர் பரிசீலனை



• திருமதி.வசந்தா



• திரு.நல்லதம்பி

முதல் பரிசாக ரூபாய் மூன்னூறு பரிசு பெறும் கதை.

எனக்கு வேண்டாம்!

எழுதியவர் : ஜெ.பாலமுருகன், விருதுநகர்.

இரண்டாவது பரிசாக ஒவ்வொன்றும் ரூபாய் இருநூறு பரிசு பெறும் கதைகள்.

1. மன்னிப்பாயா முகுந்த்?

எழுதியவர்: அ.கங்காதரன், தென்காசி.

2. நானா அழைத்தேன்?

எழுதியவர்: ஈ.நித்யா, அண்ணாமலை நகர்

மூன்றாவது பரிசாக ஒவ்வொன்றும் ரூபாய் நூறு பரிசாகப் பெறும் கதைகள்.

1. தடைகளைத் தாண்டி....

எழுதியவர்: எம். தங்கராசு, போதுப்பட்டி அஞ்சல், நாமக்கல்.

2. முட்டுக்கட்டை தடையா?

எழுதியவர் : நிலா, திருச்சி - 12.

3. படிப்பை விடவா?

எழுதியவர்: ஜெ.கண்ணன், ரெட்டியூர், சேலம்-4.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

வெளியிட ஏற்கப்பட்டுள்ளவை:

1. என்ன காரணம்?
   எழுதியவர் : நா.சிவசுந்தர், வீரபாண்டியன் பட்டணம்.
2. தும்மினால் தண்டனை! -
   எழுதியவர் : எஸ்.சிந்துஜா, தஞ்சை.
3. புலி, புலியானது! -
   எழுதியவர் : இ.கணேஷ் ராம், கடலூர்
4. அவனா கொடுத்தான்! -
   எழுதியவர்: கபிஸ்தலம் எஸ்.வினோத்பாபு
5. தானாக
   எழுதியவர் : மூ.சித்ராதேவி, தூத்துக்குடி-2
6. அண்ணனுடன் வருவாயா? -
   எழுதியவர் : பி. லட்சுமி, கொக்கலடி, பாமணி அஞ்சல்
7. பரிசு யாருக்கு? -
   எழுதியவர் : என். ஜெயசங்கர், மயிலாடுதுறை
8. நியாயப்படுத்த
   எழுதியவர் : செல்வி பாத்திமா ரிஸ்மியாகனி. கொழும்பு-12, ஸ்ரீலங்கா
9. இதுதான் சொர்க்கம்!
   எழுதியவர் : ச.இரவிச்சந்திரன், குட்டூர்
10. கேசவனின் ரோபோ!
    எழுதியவர் : ஹ.அபிராமி, திருச்சி-12.



உரக்கப் படிக்க உன்னதக் கதைகள்

வள்ளலைப் பாடிய வேந்தன்!

அறிஞர்களிடமோ, கலைஞர்களிடமோ திறமையைக் கண்டால், பரிசு வழங்கிப் பாராட்டுவது மன்னர்களின் இயல்பு. இந்தப் பரிசு பொற்காசுகளாக இருக்கலாம்; வயல், தோப்புகள் நிறைந்த கிராமங்களாகவும் இருக்கலாம்; யானை, எருமை, ஆடு மாடுகளாகவும் இருக்கலாம்.

திறமைகளைப் பாராட்டும் வழக்கம், மன்னர்களைப் போலவே பெரிய செல்வர்களிடமும் கூட இருந்தது. இவர்களும் மன்னர்களைப் போலவே வாழ்ந்தனர். இவர்களைப் பெருங்குடிக்கிழார் என்று அழைத்தனர்.

இப்படிப்பட்ட பெருங்குடிக்கிழார் ஒருவர் சோழ நாட்டில் சிறுகுடி என்ற ஊரில் வாழ்ந்தார். அவர் பெயர் பண்ணன். சிறுகுடி கிழார் பண்ணன் என்றே அவரை அழைத்தனர்.

உழவைத் தொழிலாகக் கொண்ட பண்ணனின் நிலங்களில் ஒன்றுக்குப் பத்து விளைந்தது. செல்வம் கொழித்துக் குவிந்தது.

பசித்து வந்த அனைவரையும் புசிக்க வைத்து பண்ணன் மகிழ்ச்சி கொண்டார். உணவுத் தட்டுப்பாடு தலைகாட்டிய இடங்களில் எல்லாம் பண்ணன் அனுப்பி வைத்த நெல் வண்டிகள் மக்களின் பசியைப் போக்கின. மூவேந்தர்களாலும் ஆளப்பட்ட அக்காலத் தமிழ்நாட்டைப் பஞ்சமே இல்லாது கவனித்துக் கொண்ட பெருமை பண்ணனையே சாரும்.


பசி நோய்க்கு அருமருந்தாகத் திகழ்ந்த பண்ணனின் பெருமை

சோழ மன்னர் கிள்ளிவளவனின் புகழைக் காட்டிலும் உயர்ந்திருந் தது. மன்னன் கிள்ளவளவனைப் புகழ்ந்து பாடிய புலவர் பெருமக் கள், பண்ணனைப் பாடவும் தவற வில்லை.

தன்னுடைய நாட்டில், தனக்குக் கீழ்ப்படிந்த குடிமகனாக வாழும் பண்ணனது புகழையும், வள்ளல் தன்மையையும் கிள்ளிவளவன் அறிந்தான். பண்ணனைப் பாராட்ட வேண்டும் என்று விரும்பினான். வரவழைத்து அரசவையிலேயே பாராட்டியிருக்கலாம். ஆனால், கிள்ளிவளவன் அப்படிச் செய்ய வில்லை. பண்ணன் வாழ்ந்த சிறு குடிக்கே கிளம்பி விட்டான்.

தான் பண்ணனைப் பற்றி அறிந் தவை சிறிதளவே என்ற உண்மை யைப் போகும் வழியில் சோழ மன் னன் கிள்ளிவளவன் அறிந்து கொண்டான். இப்படியும் கூட ஒரு கொடைவள்ளல் இருக்க முடியுமா என்ற சந்தேகம் மன்னன் மனத்தில் தோன்றியது. தன்னைப் போன்ற மன்னர்களைக் காட்டிலும் பண்ண னைப் போன்ற கொடைவள்ளல் களே நாட்டிற்கு அவசியம் என்ற முடிவுக்கு வந்தான்.

தன்னைக்காண சோழநாட்டு மாமன்னனே தான்வாழும் சிறு குடிக்கு வந்ததை அறிந்ததும் பண் ணன் திகைத்தான்; மனம் உருகி னான்; வரவேற்றான். மக்களின் பசிப்பிணி ஓட்டும் பண்ணன் போன்ற மக்கள் தொண்டர்கள் நீண்ட காலம் வாழ்வதே நாட் டுக்கு நன்மை தரும். அதனால், தன்னுடைய மிச்சமுள்ள வாழ் நாளையும் சேர்த்துக் கொண்டு



பண்ணன் நீண்ட நெடுங்காலம் வாழ வேண்டும் என்று ஒரு பாடலைப் பாடி மன்னன் பண்ணனை வாழ்த்தினான். ஆமாம், மன்னன் கிள்ளிவளவன் அருமையாகப் பாடல் எழுதும் புலவனும் கூட!

பண்ணனின் சிறப்புகளைக் கேட்டதும் தன்னைக் காட்டிலும் பெருமை கொண்டவனா என்று சோழ மன்னன் பொறாமை கொள்ளவில்லை. தனக்கு அடங்கிய குடிமகன்தானே என்று அவைக்கு வரவழைத்துப் பாராட்டவில்லை. மன்னன் என்ற தகுதியைக் கூடப் புறக்கணித்து விட்டு பண்ணனைப் பாராட்டத்தானே சிறுகுடிக்குச் சென்றான். தன்னிலும் உயர்ந்தவன் பண்ணன் என்று தானே பாடலைப் பாடி, தன்னைக் காட்டிலும் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்தினான்! எத்தனை பரந்த உள்ளம் சோழ மன்னனுக்கு!

கொடை வள்ளலாகிய பண்ணன் மிகச் சிறந்தவன்தான். சந்தேகமே இல்லை. ஆனால், சோழ மன்னன் கிள்ளிவளவன் தனது தகுதி மறந்த உயர்ந்த உள்ளத்தால்; செயல்களால் பண்ணனைக் காட்டிலும் உயர்ந்து விடுகிறான். புலவர்கள்தான், அரசவைக்கு வந்து மன்னர்களைப் புகழ்ந்து பாடுவார்கள். இதுதான் மரபு. ஆனால் ஒரு மாமன்னனே, ஒரு குடிமகனைத் தேடிச் சென்று பாடி வாழ்த்திய பண்பு எத்தனை உன்னதமானது; புதுமையானது!

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து
(குறள் 978)

என்ன ஒற்றுமை? – போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் சரியான விடை எழுதியிருந்தார்கள். குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கைகொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

(1) எம். எஸ். வடிவேலன், நாட்டரசன்கோட்டை, (2) இரா. நலங்கிள்ளி, அம்மையன்பட்டி, (3) கே. ஐரிஸ் சகாய பாமா, திட்டுவிளை, (4) வி. கோபால், மதுரை – 10, (5) எஸ். பிரதீப், பாண்டமங்கலம், (6) எஸ். ஆர். சிந்தியா, வண்டவிளை, எட்டணி, குமரிமாவட்டம், (7) பெ. ஆறுமுகம், விருதுநகர், (8) ஆர். மரகதவல்லி, மதுரை – 7, (9) எஸ். ரம்யா, கொரநாட்டுக் கருப்பூர் அஞ்சல், (10) வி. ஹரிகுமார், கோவில்பட்டி – 1, (11) என். ரமாநாராயணன், சிறுமுகை அஞ்சல், (12) சி. நவீன், சென்னை – 14, (13) பி. எம். சபிதா, திருச்சி – 17, (14) இ. அன்பழகன், புதுவை – 10, (15) பி. வினோத் குமார், புதுவை – 9, (16) அ. மேரி அருள்பிரியா, மூங்கில்துறைப்பட்டு அஞ்சல், (17) தேவந்தி துரைராஜ், திருப்பத்தூர் – 2, (18) மனீஷா மணிமாறன், வடக்கன்குளம், (19) பி. இளம்பரிதி, வண்டுவாஞ்சேரி அஞ்சல், (20) என். ரேகா, மதுரை – 1. பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி. சரியான விடை : வீரன், முரசு, கரம், பாரதி, சேரன், மரம், தாரகை, ஆரம், புரவி, சிரம், அரசி, உரல். இரண்டு ஒற்றுமை 1. எல்லாம் மூன்று எழுத்துக் கொண்டவை, 2. எல்லாம் இரண்டாவது எழுத்தாக 'ர' எழுத்தைக் கொண்டவை.

நானா ஊசிக்கு அஞ்சுவேன்?

எஸ்.ஆர்.ஜி.சுந்தரம்

காட்சி-1

இடம் : பாலாஜி வீடு

லதா, முரளி, பாலாஜி

லதா :பாலாஜி! பாலாஜி!

பாலாஜி : வா லதா! வா முரளி! என்ன இவ்வளவு காலையிலே வந்திருக்கிங்க!

லதா : உனக்கு எங்கள் வாழ்த்துக்கள் பாலாஜி!

முரளி : நேத்து நடந்த 'கருணையின் சக்தி'ங்கிற பேச்சுப் போட்டியிலே, நீ ரொம்பப் பிரமாதமா பேசினே... நாங்க எதிர்பார்த்த படியே உனக்கே முதல் பரிசும் கிடைச்சுட்டுது. அதற்காக எங்கள் வாழ்த்துகள்! பாராட்டுகள்!

பாலாஜி : நன்றி லதா! நன்றி முரளி! நான் எந்தப் போட்டியில ஜெயிச்சாலும் முதல்லே வீடு தேடி வந்து பாராட்டற நண்பர்கள் நீங்கதான்... ரொம்ப நன்றி! உட்காருங்க 'ஜாங்கிரி' சாப்பிட்டுப் போகலாம்!

காட்சி 2

இடம் : தெரு

லதா : முரளி, அதோ பாலாஜி வந்துக்கிட்டுருக்கான் பாரு!

முரளி : லதாக்கா! பாலாஜியின் தோள் பட்டையிலே பாரேன்... ஏதோ கருப்பா இருக்கு இல்லே?

லதா : ஆமாம்! என்ன அது?... ஐயோ தேளு! தேளு! பாலாஜி, உன் தோள் பக்கமா பாரு தேளு! தட்டி விடு!

பாலாஜி : (சிரித்து) இந்தத் தேள் என்னை ஒன்னும் பண்ணாது. ஏன்னா



இது பொய்த்தேளு! பிளாஸ்டிக். தொட்டுப் பாருங்க! எங்க மாமா இப்படி விதம்விதமா ஏதாவது எனக்கு அடிக்கடி வாங்கித்தர வழக்கம்... உங்களுக்கும் காண்பிக்கலாம்னு தான் கொண்டு வந்தேன்.

முரளி : பாலாஜி, இன்னிக்கு என்ன டிபன் கொண்டு வந்திருக்கே?

பாலாஜி : சர்க்கரைப் பொங்கல்! உங்களுக்கும் சேர்த்து நிறையக் கொண்டு வந்திருக்கேன். நீங்க...?

லதா : நான் சேமியா உப்புமா... முரளி தோசை!

(ஒரு பார்வையற்றவர் அவர்களருகில் வருகிறார்)

பார்வையற்றவன் : தம்பி, தம்பி! கொஞ்சம் தள்ளுங்க!

லதா : முரளி, பாலாஜி வழி விடுங்க.. இவர் பார்வையில்லாதவர் போல இருக்கு.

பார்வையற்றவர் : தங்கச்சி, கபாலீசுவரர் கோயிலுக்கு எப்படிப் போகணும்?

லதா : இதோ... இந்த ரோடை கிராஸ் பண்ணி அந்தப் பக்கமா போகணும்!

பார்வையற்றவர் : வண்டிகள் நிறைய இருக்கா?

முரளி : கவலைபடாதேங்க! உங்க கொம்பை இப்படிக் கொடுங்க. நாங்க பத்திரமா அழைச்சுக் கிட்டுப் போய் எதிர் பிளாட் ஃபார்ம்லே கொண்டு விட்டுட றோம்.


பார்வையற்றவர் : நீங்க நல்லாயிருக்கணும்! நீங்க ரெண்டு பேரும் என் கொம்பு நுனியைப் பிடிச்சுக்கிட்டு முன்னே நடங்க!. நான் பின்னால வரேன்... நல்ல பிள்ளைங்க... வழியை சொல்லிட்டு அலட்சியமா போயிடாம, பொறுமையா வழி காட்டறீங்க!... போங்க! போங்க!...ம்.. ஏன் திடீர்னு நின்னுட்டீங்க...! எதிர் பிளாட்ஃபாரம் வந்துட்டுதா?

லதா : இல்லை... நீங்கதான் தயங்கி நின்னமாதிரி இருந்தது!... எதுக்காகவோ குனிஞ்சமாதிரி இருந்தது?

பார்வையற்றவர் : அது... அது.... பெரிசா ஒரு கல்லு குத்திச்சு... தள்ளிவிட்டேன்!

முரளி : கல்லா? எந்தக் கல்லையும் காணோமே!

பார்வையற்றவர் : அது... அது... எங்கே யாவது போயிருக்கும்... நீங்க நடங்க! ஆமாம்... உன்கூட ரெண்டு தம்பிங்க பேசிக்கிட்டிருந்த மாதிரி இருந்தது...



பாலாஜி : ஆமாங்க. உங்க பேரு?

பார்வையற்றவர் : குப்பன்!

பாலாஜி : எந்த ஊர்?

பார்வையற்றவர் : அதெல்லாம் தெரியாது தம்பி!... ஹா... ஹா... அப்பா!

லதா : என்ன அடிபட்டுதா?

பார்வையற்றவர் : இல்லேம்மா



சமாளிச்சுட்டேன்!

பாலாஜி : கண்ணில்லாம ரொம்ப கஷ்டப்படறீங்க பாவம்!

பார்வையற்றவர் : ஹா..! ஐயோ..! மயக்கமா வருது. சாப்பிட்டு மூணு நாளாச்சு...

லதா : முரளி, நம்ம டிபன்லேந்து பாதி பாதி எடுத்து இவருக்குக் கொடுக்கலாமா?

முரளி : ம்!... நல்ல யோசனை!... இந்தா.. என் பங்கு தோசை பாதி தரேன்!

லதா : உப்புமாவுல பாதி இதோ!

பார்வையற்றவர் : ரொம்ப நன்றிம்மா!

முரளி : பாலாஜி!... நீயும் சர்க்கரைப் பொங்கல்லே கொஞ்சம் கொடேன்... பாவம்!

பாலாஜி : லதா, முரளி, இப்படி வாங்க, (வந்ததும்) இப்படித் தள்ளி வா!... நான் இவருக்கு எதுவும் கொடுக்க மாட்டேன்.

லதா : பாலாஜி! ஏன் இப்படி நடந்துக்கறே? "வாய்ச்சொல் வீரரடி கிளியே!"ன்னு பாரதியார் பாடினதுதான் இப்போ என் நினைவுக்கு வரது!

முரளி : ஆமாம் பாலாஜி! ரெண்டு நாள் முன்னாடிதான் 'கருணையின் சக்தி'யைப் பத்தி பிரமாதமா மேடையில் பேசி முதல் பரிசு வாங்கினே... இப்போ நீ நடந்துக்கறதைப் பாத்தா, நீதான் அப்படிப் பேசினியான்னு நினைக்கத் தோணுது.

பாலாஜி : நான் செய்யறது சரிதானா இல்லையான்னு நிச்சயம் புரிஞ்சுக்கத்தான் போறீங்க!... அதுக்கப்புறம் என்னை இப்படிப் பேசினதுக்காக வருத்தப்படவும் போறீங்க! சரி, சரி, நீங்க இங்கேயே இருங்க! நான் எதிர்க்கடைக்குப் போயிட்டு வந்துடறேன், பென்சில், ரப்பர், வாங்கணும்! (போகிறான்)

காட்சி 3

வனிதா, அசோக், லதா, முரளி, பார்வை இழந்தவர், பாலாஜி

இடம்: சாலை ஓரம்

வனிதா : என்ன அசோக், ரொம்ப நேரம் ஆச்சு! இன்னும் பாலாஜியைக் காணோம்!

அசோக் : எதிர்க்கடைக்குத்தான் போறேன்னான். அங்கேயும் காணோமே!

வனிதா : ஆ! பாம்பு! பாம்பு! எழுந்திரு அசோக்! ஐயா நீங்களும் எழுந்திருங்க தன்

ளுங்க பாம்பு... பாம்பு!

அசோக் : ஹா... இத பாரு! இங்கே தேள்! வனிதா நகரு!

பார்வையற்றவர் : எங்கே பாம்பு? எங்கே தேளு? நீங்க தள்ளுங்க. நான் பாத்துக்கறேன். அடி! அடி! கொல்லு (அடிக்கிறார்) நகக்கு!.... ம்... சபாஷ்! பாம்பும் காலி! தேளும் காலி! தம்பி எப்படி என் பலம்! என்ன இது, என் கம்பால இவ்வளவு அடி அடிச்சும் ரத்தமும் வரல்ல, தேள் கொடுக்கும் நகங்கல்லே!... ஏன்?...ம்! அடேடே இது ரப்பர் பாம்பு! ரப்பர் தேளு!... சரி சரி, தம்பி, நான் சாப்பிட்டு முடிச்சாச்சு, வாரேன்!


பாலாஜி : (வந்து கொண்டே) கொஞ்சம் நில்லுங்க. எங்கே போறீங்க? உங்களுக்கு உண்மையாகவேவா கண் பார்வை இல்லை!

பார்வையற்றவர் : (தடுமாறி) ஆமாம் தம்பி! உண்மையாவே நான் பார்வை இல்லாதவன்தான். என் கண் திறந்த மாதிரியேதான் இருக்கும். ஆனா எதையும் பாக்க முடியாது?

பாலாஜி : அப்படீன்னா தேள் கொடுக்கு நகங்கல்லேன்னு சொன்னீங்களே...! எப்படி?... கண் தெரியாம எப்படி அப்படிச் சொல்ல முடியும்? ரப்பர் தேளுன்னு அப்புறம்தானே கண்டு பிடிச்சீங்க? எப்படிக் குறி தவறாம பாம்பு, தேளை அடிச்சீங்க?

பார்வையற்றவர் : (குளறி) வந்து... வந்து

பாலாஜி : ஏன் தலையைச் சொரி



"எங்க அப்பா'கோடீஸ்வரன்டா"

"பின்னே ஏன் கிழிந்த சட்டை போட்டிருக்கே!"

"எங்க அப்பா பேர்தானே கோடீஸ்வரன்?"

— பா.ஜெயக்குமார்

யறேங்க? காசில்லேன்னு சொன்னேங்க. ஆனா வேட்டியிலே ரூபாய் நோட்டுக்களை மடிச்சு சுருட்டி வச்சிருக்கீங்களே!

முரளி : ஏன்யா முழிக்கறே?

லதா : ஏமாத்தியா பிழைக்கறே?... முரளி! உன் டிபன் பாக்ஸ் எங்கே?

அசோக் : இதோ இவருடைய பையிலே இருக்கு! இவர் பார்வையற்றவர் இல்லே! மோசடிக்காரர்; திருடன்.

லதா : பாலாஜி!... உன் யோசனை நல்ல யோசனை! பிளாஸ்டிக் பாம்பையும், தேளையும் போட்டு, இவர் பொய்யர்ன்னு எங்களுக்குக் காண்பிச்சுட்டியே!

வனிதா : நாங்ககூட ஏமாந்துட்டோம்! நல்லா நம்பியிட்டோம்!

முரளி : பாலாஜி! இவர் உண்மையிலேயே பார்வை இல்லாதவர் இல்லை, மோசடிக்காரர் என்பதை எப்படித் தெரிஞ்சுக்கிட்டே? எப்படி சந்தேகம் வந்தது?

பாலாஜி : நீங்க இவருக்கு வழிகாட்டிக் கிட்டு முன்னே போய்க்கிட்டிருந்தப்போ, ஒரு ஐந்து ரூபா நோட்டு சாலையிலே பறந்து வந்து இவர் காலிலே பட்டு நின்னுது. அப்போ இவர் 'டக்'குன்னு குனிஞ்சு அந்த ரூபாயை எடுத்துத் தன் பைக்குள்ளே மறைச்சுக் கிட்டார்! இதை நான் கவனிச்சேன். உண்மையிலேயே பார்வையில்லாதவராக இருந்தா, இந்த ரூபாய் நோட்டை ஏதோ காகிதம்னு நினைச்சு விட்டிருப்பாரே!

வனிதா : டிபன் பாக்ஸையும் இல்லே திருடி வச்சுக்கிட்டார்!

பாலாஜி : லதா, பாத்திரம் அறிந்து பிச்சை போடணும்னு சொல்வாங்க! யாருக்குக் கருணை காட்டணுமோ அவங்களுக்குக் கருணை காட்டறதுதான் சரி! இந்த மாதிரி திருட்டுவேஷம் போடறவங்களுக்குக் கருணை காட்டறது தப்பு!

லதா : பாலாஜி! என்னையும் முரளியையும் மன்னிச்சுடு! இந்த உண்மை தெரியாம, அவசரப்பட்டு உன்னை 'வாய்ச் சொல் வீரன்'னு கேலி பண்ணிப் பேசிட்டோம்!

முரளி : அதுக்காக வருந்தறோம்! அதோ இந்த ஆள் நழுவறான்... அவனைப் பிடிங்க!

பாலாஜி : அதோ போலீஸ்காரர் வரார்... அவர்கிட்டே ஒப்படைச்சுடுவோம்!

5. அலைமோதும் நெஞ்சங்கள்



உதயன் எங்கே?

வி.ர. வசந்தன்

திருமதி மார்கரெட் அம்மையாரின் அறை வாசல் வரையிலும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடந்து வந்த காளிமுத்து, பணியாளர் கதவைத் திறந்ததும் சோர்வுற்றவனைப் போல் தள்ளாடிக் கொண்டு உள்ளே நுழைந்தான்! வேதனை தாளாதவனைப் போல வயிற்றைப் பிடித்துக் கொண்டு அம்மையாரின் முன்னால் நின்றான்.

அவனை ஏறிட்டுப் பார்த்த அம்மையாரின் முகத்தில் கடுமை நிறைந்தது.

"காளிமுத்து, வயிற்றிலிருந்து முதலில் கையை எடு" என்றார் அம்மையார் அதட்டலாக.

காளிமுத்து முகத்தை மேலும் கோணலாக்கிக் கொண்டு, முனகல் குரலில், "அம்மா, மூணு நாளா வயிற்றுவலி தாங்க முடியல... நீங்க நம்பாட்டியும் பரவாயில்ல... அவதி தாங்க முடியாமத்தான் தோட்ட வேலைக்குப் போகல. நல்வழி வகுப்புக்கும் வரல்ல.. இதுக்கு என்ன செய்யலாம்னு உதயன்கிட்டே ஆலோசனை கேட்டுக்கிட்டு இருந்தேன்" என்ற போது அவன் கண்களில் கண்ணீர் நிறைந்து விழுவதற்கு ஆயத்தமாக இருந்தது!

மார்கரெட் அம்மையார் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

"நீ ஏன் மூன்று நாட்களாக இப்படித் துன்பப்பட வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. உடனேயே சொல்லியிருந்தால் மருத்துவம் பார்த்திருக்கலாம் இல்லையா? நீ கேட்க வேண்டியது என்னிடந்தானே தவிர, உதயனிடம் இல்லை. தெரிகிறதா?" என்று கேட்டார்.

காளிமுத்து முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு, "உங்களுக்கு இருக்கிற எத்தனையோ வேலையில இதையும் சொல்லி வீணா கவலைப்படுத்த வேண்டாம்னு நெனச்சேம்மா" என்றான்.

அம்மையாரின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது.

"உன்னுடைய நல்ல மனதுக்கு நன்றி. ஆனால் உனக்கு ஏன் அடிக்கடி வயிற்றுவலி வருகிறது என்பது எனக்குத் தெரியும்" என்று அவன் முகத்தைப் பார்த்தார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரியாதவனாக காளிமுத்து விழிக்க மார்கரெட் அம்மையார், "நீ

அடிக்கடி புகைக்கும் பீடியினால்தான் இந்த வயிற்றுவலி" என்றார் அழுத்தமாக.

இதைச் சற்றும் எதிர்பாராத காளிமுத்து பதறிப் போய் விட்டான்.

"ஐயையோ! இது என்னம்மா, இப்படிப் பேசறீங்க? பீடியா? நானா? தொடவே மாட்டேனே...! யாரோ உங்ககிட்ட என்னைப் பற்றிப் பொய் சொல்லி இருக்காங்க. அதையெல்லாம் நம்பாதீங்கம்மா" என்று உண்மையிலேயே பதற்றத்துடன் புலம்பினான்.

மார்கரெட் அம்மையாரின் பார்வை சட்டென்று அருகில் நின்று கொண்டிருந்த உதயனின் முகத்துக்குத் தாவியது. "ஏன் உதயா, இவன் பீடி புகைப்பான் இல்லையா! நான் சொல்வது பொய் இல்லையே?" என்று அவர் கேட்க, என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறிப் போனான் உதயன். தவித்தான்.

உண்டு என்றால் காளிமுத்துவைக் காட்டிக் கொடுத்தது போலாகும். இல்லையென்றால் அம்மாவை ஏமாற்றியதாகி விடும். விழித்துக் கொண்டு அவன் நிற்க மீண்டும், "ம், சொல்? உண்டா, இல்லையா?" என்று மறுபடி கேட்டார் அம்மையார்.

உதயனின் தலை அவனை அறியாமலே "ஆமாம்" என்பது போல் அசைந்தது.

ஒரு நிமிடம் காளிமுத்துவைத் தீர்க்கமாக உற்றுநோக்கிய மார்கரெட் அம்மையார் குரலை உயர்த்தி, "இதைவிட வேறு



என்ன சாட்சி வேண்டும் உனக்கு...? இந்தப் பொய்யையும், பித்தலாட்டத்தையும் விடவே மாட்டாய் இல்லையா...? நீ யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? ஒருவேளை என்னை ஏமாற்றுவது உனக்கு எளிதாக இருக்கலாம். ஆனால் நீ ஏமாற்றுவது என்னை அல்ல. உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய். உன்னைப் போல சிறு பருவத்தில் கிடைக்கிற வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு முன்னேறாமல் விட்டவர்கள் எல்லோருமே பின்னாளில் வருத்தப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நிமிடமும் இங்கிருக்கிற நானூறு குழந்தைகளுக்காகவும் நான் போராடிக் கொண்டிருப்பது உனக்குத் தெரியாது. நீயும் முன்னேறாமல், மற்றவர்களையும் கெடுத்துக் கொண்டு இங்கிருக்காதே. இது நான் உனக்குத் தரும் கடைசி எச்சரிக்கை! இனி இது போல் ஒழுங்கற்று நடந்தால் இங்கு உனக்கு இடமில்லை" என்றபோது வயது முதிர்ந்த அந்த அம்மையாரின் உடல் கோபத்தால் நடுங்கியது.



அவரது பார்வை உதயனின் மீது விழுந்தபோது அவன் நடுங்கினான். சற்றே குரலைத் தணித்துக் கொண்ட அம்மையார், "படிக்க வேண்டும், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆவலுடன் இங்கே வந்த நீ, பின்பற்றி நடக்க வேண்டியது இவனைப் போன்றவர்களை அல்ல.... நோக்கத்தைச் சிதற விட்டுப் பின்னால் வருத்தப்படாதே" என்று எச்சரிக்கும் தொனியில் சொன்னார்.

மீண்டும் காளிமுத்துவைப் பார்த்து, "உன்னை அறை எண் ஐம்பதுக்கு மாற்றி இருக்கிறேன். இப்போதே உன் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு அங்கே போய் விடு" என்றார்.

இருவரும் வெளியே வந்தார்கள். காளிமுத்துவின் உடல் முழுவதும் கோபத்தால் ஆடிக் கொண்டிருந்தது. பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டு, "இன்னைக்கு எனக்கு

ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும். ஒன்று, இவன் கோள் சொல்றதை இத்தோட விடணும், இல்லேன்னா, நான் இங்கே இருந்து ஓடிப் போகணும். எது நடக்குதுன்னு பார்த்திரலாம்'' என்று உறுமி விட்டு விடுவிடுவென்று விடுதியை நோக்கி நடந்தான்.

ஒன்றும் புரியாமல் நின்ற உதயன் அவனைத் தொடர்ந்தான்.

கோபாவேசத்துடன் தன் அறைக்கு வந்த காளிமுத்து, சாத்தியிருந்த கதவைப் படாரென்று காலால் உதைத்துத் தள்ளி விட்டு உள்ளே நுழைந்தான்.

தன் படுக்கையின் மேல் அமர்ந்து பாடங்களைப் படித்துக் கொண்டிருந்த மனோகரனைப் பார்த்து, ''ஏண்டா உனக்கு என்ன திமிர் இருந்தா, அந்த வெள்ளைக்காரிகிட்ட போய் என்னைப் பற்றிக் கோள் சொல்லுவே?'' என்று கத்திய வாறு பாய்ந்து வந்து அவன் மார்ச் சட்டையைப் பற்றி இழுத்தான்.

பின்னே வந்த உதயன் அங்கு நடப்பதைப் பார்த்து செய்வதறியாமல் திகைத்து நிற்க, மனோகரன் காளிமுத்துவை ஏறிட்டு நோக்கினான்.

''உனக்கு என்ன கேட்கணுமோ அதை அமைதியாக் கேளு. முதல்ல சட்டையை விடு'' என்றான் பதற்றமின்றி மனோகரன்.

சட்டையை விட்டு விட்டு மனோகரனை உருட்டி விழித்து நோக்கிய காளிமுத்து, ஆத்திரம் குறையாதவனாக, "ஏண்டா நாயே, என் விஷயத்துல தலையிடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருப்பேன்? என்னை என்னன்னு நெனச்சுக்கிட்ட? என்று பாய்ந்தான்.

"நான் ஒண்ணும் கோள் சொல்லலே காளிமுத்து. உண்மையைத்தான் சொன்னேன். உன் விஷயத்துல தலையிடக் கூடாதுன்னு சொல்றியே? நீ மட்டும் அடுத்தவங்க விஷயத்துல தலையிடாமலா இருக்கே?" என்று துணிவாகக் கேட்டான் மனோகரன்.

"அப்படி நான் யார் காரியத்துலடா தலையிட்டேன்? வீணா ஏதாச்சும் பேசினே, பல்லெல்லாம் அடிச்சுப் பேத்துருவேன். ஆமா" என்று ஆவேசத்தோடு பாய்ந்தான் காளிமுத்து.

"யார் காரியத்திலேயும் நீ நிஜமாகவே தலையிடறதில்லையா? இங்க நடக்கிற எதுவுமேவா உனக்குத் தெரியாது? உன் வேலை உண்டு, நீயுண்டுன்னுதான் இங்க நடந்துக்கறியா?" என்று கேட்டு நேருக்கு நேர் அவனை உறுத்துப் பார்த்தான் மனோகரன்.

அவனுக்கு பதில் சொல்ல முடியாமல் நின்ற காளிமுத்துவின் முகம் கோபத்தில் இரத்தமாகச் சிவந்தது. அவன் முகம் பார்க்க இயலாத கோரமாக மாறியது. ஒரே பாய்ச்சலாக மனோகரனை நெருங்கியவன் பளாரென்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். வலி தாளாமல் முனகிக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டவனை முரட்டுத்தனமாக இழுத்து நிறுத்தி ''பளார் பளார்'' ரென்று மாறி மாறி அடிக்க ஆரம்பித்தான்.

உதயன் பதறியவாறு




ஓடிவந்து, "இது என்னது, காளிமுத்து! மனோகரனை விட்டுடு. அம்மாவுக்குத் தெரிஞ்சா உன்னை சும்மா விட மாட்டாங்க" என்று விலக்கி நிறுத்த முயன்றான்.

"உனக்கு தைரியம் இருந்தா, இதையும் போயி உங்க அம்மாகிட்டே சொல்லுடா. தோலை உரிச்சுடுவேன்" என்று மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியவன் கொடியில் கிடந்த தன் துணிகளை உருவிப் பெட்டியில் திணித்துக் கொண்டு, விருட்டென்று அறையை விட்டுப் போய் விட்டான்.

வலி தாளாமல் தன் உடம்பைப் பிடித்துக் கொண்டு நின்ற மனோகரனைப் பார்க்க உதயனுக்குப் பரிதாபமாக இருந்தது. அவனருகில் சென்று, "ஏன் மனோகரா, எதுக்கு நீ அவனைப் பற்றி அம்மாகிட்ட சொன்னே? அதனாலேதானே இவ்வளவு பிரச்னையும்?" என்றான்.

மனோகரன் கண்ணீர் நிறைந்த கண்களால் அவனைப் பார்த்து வேதனையுடன் சிரித்தான். "அரவணைக்கிற கைகளையே அவன் அலட்சியப்படுத்தறதை என்னால தாங்க முடியல உதயா. அம்மாவைப் பற்றி எல்லோர்கிட்டேயும் இல்லாததையும் பொல்லாததையும் ஏதாவது சொல்லி, மனசைக் குழப்பிக்கிட்டே இருக்கான். அவன் உன்னையும் கெடுத்துடக் கூடாதேன்னுதான் முன்ஜாக்கிரதையா சொல்லி வச்சேன். அது சரி, அவன் பெட்டியத் தூக்கிக்கிட்டு எங்கே போறான்?" என்று கேட்டான்.

"அவனை வேற அறைக்கு அம்மா போகச் சொல்லிட்டாங்க. ஐம்பதாம் எண் அறைதான் இனி அவனுக்கு இருப்பிடம். நமக்குத் தொந்தரவு இல்லை. கவலைப் படாதே" என்று சிரித்தான் உதயன்.



மனோக்ரன் ஒன்றும் சொல்லவில்லை. ஆனாலும் அவன் முகத்தில் பெரும் நிம்மதி பரவியது. "உதயா, அம்மாவோட அன்பை உணராதவங்க யாரும் இங்க அதிக காலம் தங்கவே முடியாது. ஏன் தெரியுமா?" என்று கேட்டான்.

உதயன் காரணத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் அவன் முகத்தை ஆர்வமாகப் பார்த்தான்.

"இந்த இல்லத்தில் இருக்கிற கட்டுப்பாடுகளும், உழைப்புந்தான் இப்படிப் பட்டவங்களோட மனசுக்குக் கடினமான காரியங்களாத் தெரியுமே தவிர, அதன் பின்னணியில் இருக்கிற உண்மையான அக்கறையும், அன்பும் புலப்படாது. அம்மாவோட மனசு எனக்குத் தெரிஞ்சிருக்கிறதாலத்தான் நான் உங்கிட்ட சொல்றேன். தவறான பேச்சுகளுக்கு காது கொடுத்து உன் வாழ்க்கையையும் பாழாக்கிக்காதே. காளிமுத்து இங்க நடந்துக்கிட்டது அம்மாவுக்குத் தெரிஞ்சா உண்மையிலேயே நிலைமை விபரீதமாகும், நான் இதை நிச்சயமா அவங்ககிட்ட சொல்ல மாட்டேன். என்றாவது ஒருநாள் அவனும் திருந்தற காலம் வராம போயிடாது" என்றான் மனோகரன்.

மனோகரன் மார்கரெட் அம்மையாரின் மீது வைத்திருந்த பாசம் உதயனின் மனதைத் தொட்டது. "நீ அம்மா மேல வச்சிருக்கிற பாசத்தைப் பார்க்கும்போது, அவங்க உண்மையிலேயே உன் மேல ரொம்ப அன்பு காட்டி இருக்காங்கன்னு தோணுது" என்றான்.

"எங்கிட்ட மட்டுமில்ல உதயா, இங்கே இருக்கற ஒவ்வொருத்தர்



''வேதங்கள்ல நான்கு வகை தானேடா இருக்கு? நீ என்ன ஐந் துன்னு எழுதியிருக்கே?''

''ஆயுர்வேதம்னு ஒண்ணு இருக்கே சார், தெரியாதா?''

– சீர்காழி வி. ரேவதி

மேலேயும் அவங்க தனிப்பட்ட அக்கறை வச்சிருக்காங்க... அவங்க அன்பு மட்டும் இல்லாட்டி, எங்க அம்மா, அப்பா போலவே நானும் என்னிக்கோ செத்துப் போயிருப்பேன்'' என்றபோது மனோ கரனின் குரல் தழுதழுத்தது.

உதயன் பரிதாபமாக அவன் முகத் தைப் பார்த்தான். ''உனக்கும் அம்மா அப்பா ரெண்டு பேருமே செத்துப் போயிட்டாங்களா?'' என்று கேட்டான்.

சற்று நேரம் மௌனமாக நின்று கொண்டிருந்த மனோகரன், கண்களில் துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்து விட்டுப் பேசலானான்.

''உதயா, என்னோட அப்பா ஒரு லாரி டிரைவர். எங்கிட்ட ரொம்பவும் அன்பு வச்சிருந்தாரு... எனக்கு அன்னிக்கு ஐந் தாவது பிறந்த நாள், காலையில லாரி எடுத்துட்டுக் கிளம்பற போது, புதுச் சட்டையெல்லாம் வாங்கிட்டு வர்றேன்னு சொல்லி என்னைத் தூக்கி முத்தம் தந்துட்டுப் போனாரு. சாயங்காலம் அப்பா புதுச்சட்டை வாங்கிட்டு வருவாருன்னு நானும் அம்மாவும் காத்துட்டு இருந்தோம். ஆனா, அப்பா வரலே...''

உதயன் அவசரமாகக் குறுக்கிட்டு, ''ஏன், என்ன ஆச்சு?'' என்று கேட்டான்.

மனோகரனுக்குப் பேச்சு வராமல் அழுகை தொண்டையை அடைத்தது.

''....லாரி விபத்துக்குள்ளாகி அப்பா இறந்துட்டாங்க'' என்று சொல்லி விட்டுத் தேம்பித் தேம்பி அழுதான்.

''அப்படீன்னா, உங்க அம்மா...?''

''அப்பா இறந்த அதிர்ச்சி தாங்காம, அம்மாவும் உடனே இறந்துட்டாங்க.''

உதயனுக்குத் தன் தந்தையாரின் நினைவு மனத்தில் எழுந்தது. அவர் தன்னிடம் வைத்திருந்த அன்பும், தங்கள் குலத்தொழிலான மீன் பிடிப்பதை விட்டு விட்டு, அவனாவது படித்து நல்ல வேலை யில் அமர வேண்டும் என்ற அவரது ஆசையும் நினைவுக்கு வந்து நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது. கண்ணீர் பொங்கி இரு கன்னங்களிலும் வழிந்தோடியது.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் இருவரும் தங்கள் கடந்த கால சோகத்தில் ஆழ்ந்து போயி னர்.

முதலில் தன்னைத் தேற்றிக் கொண்ட மனோகரன் தொண்டையைச் செருமிய வாறு, ''உதயா, அந்த அறிவு தெரியாத வயசுல அனாதையா நின்ன என்னை யாரோ ஊர்ப் பெரியவங்க இங்க கொண்டு வந்து சேர்த்தாங்க. அன்றையில இருந்து மார்கரெட் அம்மாதான் எனக்கு எல்லாம். ஒரு தடவை டைபாயிட் காய்ச் சல் வந்து நான் ரொம்பக் கஷ்டப்பட்ட போது, அவங்கதான் ஒரு தாய் போல ராப்பகலா அவங்க வீட்டிலேயே என்னை வச்சுப் பாத்தாங்க. அன்பு என்கிற வெளிச் சத்தை நான் மறுபடியும் அவங்க மூலமாத் தான் பார்த்தேன். அப்படிப்பட்ட ஒரு நடமாடும் தெய்வத்தைப் போய் வாய்க்கு வந்தபடி பேசறதை என்னால சகிக்க முடியாது. நீ புதுசா வந்திருக்கிறே. போகப் போக உனக்கே எல்லாம் தெரியும், அம்மா வோட மனசு எப்படிப்பட்டதுன்னு'' என் றான்.

உதயன் தலைகுனிந்திருந்தான். அவன் மனம், இவ்வளவு நல்ல மனம் படைத்த அம்மாவின் கோபத்திற்கு ஆளாகி விட் டோமே என்று உள்ளுக்குள் அழுதது. அந்த நல்ல மனதைப் புண்படுத்தி விட் டோமோ என்று அவன் மனதுக்குள் நடுங்கினான்.

(தொடரும்)

நடு இரவு. பழுத்த அனுபவசாலியான அமைச்சர் புலியார் ஒரு வழக்கு பற்றிய உண்மையை அறிய, தானே அந்தத் தள்ளாத வயதிலும் கூட நேரிடையாகச் சென்று சோதனையிட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்.

அருவிக்குப் பக்கத்தில் இருந்த சாலையில் ஒரு வண்டி போய்க் கொண்டிருந்தது. அதன் பின்னால்..! அறிமுகமான நடையாகத் தெரிந்தது. வயதாகிவிட்டதால் சட்டென்று புலியாரால் ஊகிக்க முடியவில்லை.

"யாரது?" என்று உரக்கக் கேட்டார்.

"நான்தான் அமைச்சரே..." என்று டாக்டர் க. .'யாரின் பதில் வந்தது.

"இந்த நேரத்தில் எங்கே கிளம்பினீர்கள்? வண்டியில் என்ன?" என்று திகைப்புடன் கேட்டார் அமைச்சர் புலியார்.

"வண்டியில் என்னுடைய உடமைகள்தான். நான் தென் மலைக் காட்டை விட்டு வெளியேறுகிறேன் அமைச்சரே" என்று தயங்கித் தயங்கி பதில் கூறினார் கரடியார்.

மேலே பேச முடியாமல் கரடியாரின் மனத்தில் ஏதோ தாங்க முடியாத துயரம் இருப்பதை அமைச்சரால் உணர முடிந்தது.

"அமைச்சரே, தாங்கள் நேர்மையானவர். காட்டு விலங்குகளுக்கு நல்லாட்சி தருவதில் தீவிரமாக இருப்பவர். நீதியும் நேர்மையும் எந்த சக்திக்கும் வளையக்கூடியதாக இருந்து விடக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருப்பவர்..."

மேலே பேச முடியாமல் கரடியார் விம்முவதை புலியாரால் உணர முடிந்தது.

"கரடியாரே, என்ன காரணத்தினாலோ மிக மனம் நொந்து போயிருக்கிறீர்கள் என்பதை உணரமுடிகிறது. காட்டை விட்டு நீங்கள் சொல்லிக்காமல் கொள்ளாமல் இப்படி நடுராத்திரியில் கிளம்பிப் போகும் அளவுக்கு என்ன நேர்ந்து விட்டது? உங்கள் பிரச்னையை என்னிடம் கூறுங்கள். என்னிடம்கூட நம்பிக்கை இல்லையா? என்னால் தீர்க்கக்கூடிய பிரச்னையாக இருந்தால் பார்ப்போம். இல்லையேல், நீங்கள் போவதை நான் தடுக்க மாட்டேன்."



பயப்படுத்தும் பாஸ்!

டாக்டர் காடியாரும், அமைச்சர் புலியாரும் ஒரு பெரிய பாறையின் மேல் அமர்ந்து கொண்டனர்.

"சொல்லுங்கள்? உங்களை நம்பியிருக்கும் எங்களையும் ஏராளமான நோயாளிகளையும் 'அம்போ'வென்று கைவிட்டு விட்டு இப்படி ஓடிப் போகும் அளவுக்கு என்ன நடந்து விட்டது?" என்று கேட்டார் புலியார்.

"அமைச்சரே, நான் மருத்துவக் கல்லூரி நடத்தி வருவது உங்களுக்குத் தெரியும். ஐந்து ஆண்டுகள் படிப்பு. தேர்வில் வெறி பெறுவோருக்கு டாக்டர் பட்டம் தந்து, தனியாக டாக்டர் தொழில்

நடத்த அனுமதியும் தருகிறேன்."

"இதெல்லாம் எனக்குத் தெரிந்தது தானே? உங்கள் மாணவர்கள் எல்லாக் காடுகளிலும் டாக்டர் தொழில் நடத்தி மருத்துவத் தொண்டு புரிந்து வருகிறார்களே?"

"தேர்வில் உண்மையாகவே தேர்ச்சி பெறுபவர்களுக்கு மட்டுமே நான் டாக்டர் பட்டம் வழங்குகிறேன். எந்த ஒரு அச்சுறுத்தலுக்கும், நிர்பந்தத்திற்கும் நான் பணிவதில்லை. உயிர்காக்கும் தொழில் அல்லவா?"

"ஆமாம். சிபாரிசுக்குப் பணிந்தால் நோயாளிகளின் கதி என்னாவது?"

"இந்த ஆண்டு எனக்குச் சோதனை வந்து விட்டது. மகாராணி யாரின் தம்பி மகன், என்னிடம் டாக்டருக் குப் படிக்கிறான். இது கடைசி ஆண்டு. அவன், வகுப்புக்குச் சரியாக வருவதும் இல்லை. வந்தாலும் கவனிப்பதில்லை. காட்டைச் சுற்றி வந்து மற்ற விலங்கு களைப் பயப்படுத்துவதிலேயே காலத் தைக் கழிக்கிறான். அவனைப் ஃபெயி லாக்க வேண்டும். ஆனால் அவனுக்குப் பாஸ் போட வேண்டும் என்று ராணியார் என்னைத் தனியாகக் கூப்பிட்டு பயப் படுத்தியிருக்கிறார்!"

அமைச்சர் புலியார் கலவரத்துடன் கரடியாரைப் பார்த்தார்.

"ராணியாரின் தம்பி வேறு இன்று காலை என்னைத் தனியாகச் சந்தித்து, தன் மகனுக்குப் பாஸ் போட வில்லை யென்றால். மருத்துவமனைக்கு



வெடிகுண்டு வைத்து விடுவதாக மிரட்டி விட்டுப் போனார். தகுதி இல்லாத ஒரு வருக்கு டாக்டர் பட்டம் தந்து தொழில் நடத்த அனுமதி தந்தால், நோயாளிகள் கதி என்ன வாகும்? இந்தத் தவறான செயலைச் செய்ய என் மனசாட்சி இடம்தரவில்லை. அதுதான் இரவோடு இரவாக ஒருவருக்கும் தெரியாது கிளம்பி விட்டேன். என் குடும் பத்தார் காலையிலேயே போய் விட்டார் கள்."

புலியார் கவலையோடு கரடியாரைப் பார்த்தார்.

"கரடியாரே, டாக்டர் தொழில் புனித மான; உன்னதமான தொழில். இது உங் களுக்கு மட்டும் ஏற்பட்டுள்ள சோதனை அல்ல. இங்குள்ள காட்டு மக்களின் நல னுக்கும் ஏற்பட்டுள்ள சோதனை. பிரச் னையை எதிர்த்து, தீர்க்க முயல வேண்டுமே தவிர அதற்குப் பயந்து ஓடி ஒளியக் கூடாது."


"இதற்குத் தீர்வு இருக்கிறதா?"

"கண்டிப்பாக இருக்கிறது. இதெல்லாம் சிங்கராஜாவுக்குத் தெரியுமா?"

"அது எனக்குத் தெரியாது. இதைப் பற்றி வெளியே யாரிடமாவது கூறினால் மருத்துவமனைக்கே தீ வைத்து விடுவதாக ராணியாரின் தம்பி மிரட்டியிருக்கிறார்."

"கரடியாரே, இனி இந்தக் கவலை என் னுடையது. வண்டியைத் திருப்பி, உங்கள் பொறுப்பைக் கவனிக்க, மருத்துவமனைக் குப் போங்கள். மன அமைதியுடன், மகிழ்ச் சியுடன் உங்கள் கடமைகளைக் கவனியுங்கள்."

"அமைச்சரவர்களே, காலையில் ரிசல்ட்டைப் போட்டாக வேண்டுமே...?"





''இலக்கிய விழாவுக்குப் போறேன். நீயும் **வரயா?**''

''எந்த தியேட்டர்லடா அந்தத் திரைப்படம் **நடக்குது?...**''

நெற்குப்பை கி.மனோகரன்

"கரடியாரே, என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது அல்லவா?"

"என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்! உங்களை நம்பாவிட்டால் நான் வேறு யாரை நம்ப முடியும்? நம்பிக்கைக்கு இலக்கணமாக இருப்பவரே தாங்கள்தானே? நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்?"

''மகாராணியின் மைத்துனர் பையனுக்கு பாஸ் போட்டு விடுங்கள்...!''

கரடியார் அதிர்ந்து போய் நின்றார்.

"கரடியாரே... திகைத்துப் போக வேண்டாம். பாஸ்தான் போடச் சொன்னேனே தவிர, பட்டம் அளிக்கச் சொல்லவில்லை. பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் சிங்கராஜாவின் தலைமையில் நடைபெறும் என்று அறிவிப்புச் செய்யுங்கள்'' என்று கரடியாரைத் தேற்றி அனுப்பினார் புலியார்.

புலியார் எதிர்பார்த்திருந்த அந்த வாய்ப்பு பத்து நாட்களுக்குள் கிடைத்தது. சிங்கமகாராணிக்குக் கடுமையான விஷக் காய்ச்சல். குளிர் வேறு சேர்ந்து கொண்டது. அந்த நேரம் பார்த்து டாக்டர் கரடியாரும் அவரது உதவியாளர்களும் பக்கத்துக் காட்டுக்குச் சென்றிருந்தனர். அங்கு ஏற்பட்ட ஒரு நிலச்சரிவு காரணமாக ஏரானமான விலங்குகளுக்குக் காயம் ஏற்பட்டிருந்தது. அங்கு சென்று உதவும்படி சிங்கராஜாதான் டாக்டர் கரடியாரை அவரது உதவி டாக்டர்களுடன் அனுப்பி வைத்திருந்தார். அவர்கள் இல்லாத நேரத்திலா ராணியாருக்கு இப்படிக் காய்ச்சல் வர வேண்டும்?

அமைச்சர் புலியாருக்கு உடனே தகவல் வந்தது. "கவலையே வேண்டாம். திறமையான டாக்டருடன் உடனே வருகிறேன்'' என்று கிளம்பினார் அமைச்சர். போகும்போதே பயப்படுத்தி ..க்டர் தேர்வில் பாசாகியிருந்த ராணியின் தம்பி மகனையும் அழைத்துக் கொண்டு போனார்.

"வேறு டாக்டர்கள் யாராவது கிடைத்தார்களா?" என்று கவலையுடன் கேட்டார் சிங்கராஜா.

"நம்ம அரச குடும்பத்திலேயே ஒரு டாக்டர் இருப்பதை மறந்து விட்டீர்களா மகாராஜா? தங்கள் மைத்துனரின் மகன் இந்த ஆண்டு டாக்டர் தேர்வில் பாசாகியிருக்கிறாரே? அடுத்த வாரம் நீங்கள்தானே பட்டம் அளிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் புலியார்.

"அப்படியா! மைத்துனர் மகன் டாக்டராகியிருப்பது எனக்குத் தெரியவே தெரியாதே! எத்தனை மகிழ்ச்சியான செய்தி! நம்ம கரடி டாக்டரைப் போல் இவனும் திறமையான டாக்டராகி, எல்லோருக்கும் தொண்டு செய்து நல்ல பெயர் வாங்க வேண்டும்,'' என்றார் சிங்கராஜா.

"அந்த நல்ல பணியை, மகாராணியாருக்கு வைத்தியம் பார்ப்பதில் இருந்தே; இன்றே இப்பொழுதே தொடங்க வேண்டும் என்றுதான் அவரையே அழைத்து வந்தேன்'' என்றார் புலியார்.

"அரச குடும்பத்துக்குப் பெருமைதரும் செயல்'' என்று இருவரையும் அழைத்துப் போனார் சிங்கராஜா.

"பாவம்! சிங்கராஜா அப்பாவிதான்!'' என்ற மனநிறைவுடன் நடந்தார் புலியார்.

"கவலையை விடு ராணி. நம்ம அரச குடும்பத்தைச் சேர்ந்த உன் தம்பி மகனே டாக்டராகியிருக்கிறானே! எனக்கு இது தெரியாமல் போச்சே? டாக்டர் கரடியாரும் அவரது துணை டாக்டர்களும் இல்லாவிட்டால் என்ன? உன் தம்பி மகன் இருக்கிறானே? உனக்கு என்ன குறை?'' என்றார் சிங்கராஜா அப்பாவித்தனமாக.

படுக்கையில் கிடந்த சிங்கராணி பீதி நிறைந்த முகத்துடன் தம்பி மகனைப்

பார்த்தாள். பதிலுக்கு அவனும் கலவரத்துடன் சிங்கராணியை நோக்கினான்!

"மகாராஜா, இவன் வேண்டாம். டாக்டர் கரடியாருக்கு உடனே தகவல் அனுப்புங்கள். அவரே வந்து என் உடம்பைக் கவனிக்கட்டும்" என்றார் மகாராணியார்.

"நீ இப்படிச் சொல்வது டாக்டர் தேர்வில் பாசாகிவிட்ட உன் தம்பி மகனைக் கேவலப்படுத்துவதாகும். டாக்டர் கரடியாரின் மாணவன், என்றைக்குமே சோடை போக மாட்டான்" என்ற சிங்கராஜா, "உங்க மாமிக்கு உடனே சிகிச்சையை ஆரம்பி" என்று மைத்துனர் மகனுக்கு உத்தரவிட்டார்.

சிங்கராணி கலவரத்துடன் எழுந்து கொண்டாள்.

"மகாராஜா. எனக்கு இவன் வைத்தியம் பார்க்க வேண்டாம். இவனுக்கு ஒன்றுமே தெரியாது. பயப்படுத்தி பாஸ் வாங்கினவன்," என்று அலறினாள்.

"பயப்படுத்தி பாஸ் வாங்கினானா! யாரை, யார் பயப்படுத்தினார்கள்!" – அதிர்ச்சியுடன் கேட்டார் சிங்கராஜா.

புலியார் மனதிற்குள் சிரித்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான்தான் என் தம்பியை விட்டு டாக்டர் கரடியாரைப் பயப்படுத்த வைத்தேன்."

சிங்கராஜா எரிமலையாக வெடித்தார்.


"நீ செய்த தவறின் பயனை நீயேதான் அனுபவிக்க வேண்டும். பயப்படுத்தி பாஸ் போட வைத்து டாக்டராக்கி விட்ட உன் தம்பி மகனிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ள நீயே பயப்படுகிறாயே...! இவனை நம்பி மற்றவர்கள் மட்டும் வைத்தியம் பார்த்துக் கொள்ள வர வேண்டுமா? அவர்கள் கதி என்ன ஆவது?" சிங்கராஜா புலியாரிடம் அதே வேகத்தில் திரும்பினார். "புலியாரே... அனுபவம் மிக்க நீங்கள் இருந்துமா இப்படியெல்லாம் நடக்கிறது?"

புலியார் நடந்ததையெல்லாம் விளக்கினார்.

"அடுத்த வாரம் பட்டமளிப்பு விழா. பயப்படுத்திப் பாஸ் ஆன மைத்துனரின் மகனைத் தவிர மற்றவர்களுக்கு நானே பட்டமளிக்கப் போகிறேன். மைத்துனரையும் அவர் மகனையும் சிறையில் தள்ளுங்கள்" என்றார் சிங்கராஜா. மிகப் பெரிய தவறு ஒன்று சரிசெய்யப்பட்ட மகிழ்ச்சியில் திளைத்தார் புலியார்.


'முதியோர் கல்விக்கு வந்த ஆமையார் ஏன் கோபமா திரும்பிப் போறார்?'

'கல்லாமையை இல்லாமையாக்குவோம்னு சொல்றதுக்கு பதிலா யாரோ வாய் தவறி கடலாமையை இல்லாமையாக்குவோம்னு சொல்லிட்டாங்களாம்!









பிறந்தது 1997!

தொண்ணூற் றேழு பிறக்கிறது
துள்ளி மனமோ பறக்கிறது
இன்னும் மூன்றே ஆண்டுக்குள்
இருபத் தொன்றாம் நூற்றாண்டாம்!

கடந்து வந்த நூற் றாண்டு
கண் முன் இப்போ விரிகிறது
என்ன என்ன அற்புதங்கள்
இந்த இருபதாம் நூற்றாண்டில்!

அடிமைத் தளையில் சிக்குண்டு
அவதிப் பட்ட நம் நாடு...
எப்போ விடுதலை பெற்றதுவோ?
இந்த இருபதாம் நூற்றாண்டில்!

எட்டாத் தொலைவின் அதிசயமாய்
இன்றும் தோன்றும் வெண்ணிலவில்
இறங்கி மனிதன் நடந்ததுவும்
இந்த இருபதாம் நூற்றாண்டில்!

காலம் தூரம் இரண்டினையும்
கைக்குள் அடங்கும் ஏவலராய்
எப்போ மனிதர் மாற்றினரோ?
இந்த இருபதாம் நூற்றாண்டில்!

இன்னும் எத்தனை அதிசயங்கள்
இந்த இருபதாம் நூற்றாண்டில்
எண்ண, சொல்ல, எடுத்தெழுத
எவர்க்கும் எளிதில் முடிந்திடுமோ?


இருபத்தொன்றாம் நூற்றாண்டு
எதிரே கண்ணில் தெரிகிறதே...
என்ன என்ன அதிசயங்கள்
இனிமேல் அதனில் நடந்திடுமோ?

-ரா. பொன்ராசன்








சிரிப்...
"உங்க வீட்டில் பொங்கல் கொண்டாடறது இல்லையா....!"
"எங்க அம்மாவுக்கு பொங்கல் செய்யத் தெரியாதே!"
"என்னடா... இன்னிக்கு உன் வீட்டுக்குழம்பு தித்திக்குது..."
"குழம்பில் போட வேற காய் இல்லேன்னு, கரும்பையே காயா... எங்க அம்மா போட்டுட்டாங்க....!"
"பண்டிகைகளிலேயே பொங்கல்தான் எனக்கு ரொம்ப பிடிக்கும்... பொங்கலுக்கு மட்டும் மூணு நாள் லீவு விடறாங்களே..."
"அங்கே நடக்கும் பட்டிமன்றத்தின் பெயர் என்ன?"
நாக்கு அதிகம் சுவைக்க விரும்புவது... வெண் பொங்கலா... அல்லது சர்க்கரைப் பொங்கலா....

- இரா.திலிப்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு, பேரவை, மாதாந்திர அறிமுகம் - அனுபவக் கூட்டங்கள், சிறிய விழாக்கள் யாவும் சங்கத்தின் தலைவரான குழந்தைக் கவிஞரின் இல்லத்திலேயே நடைபெறும். இக்கூட்டங்களுக்கு வருவோருக்கு குறைந்தது பிஸ்கட் காப்பி கிடைக்கும். பல நேரங்களில் இட்லி அல்லது முறுக்கு, காப்பி. இக்கூட்டங்களுக்கு வருவோரைத் தவிர, தினப்படியே

சாதனைகளில் இழைந்தவர்!

கவிஞரைக் காண வருவோர் கூட்டமும் உண்டு. இன்முகத்துடன் இவர்களை எல்லாம் எந்த நேரமானாலும் வரவேற்று, சிற்றுண்டி காப்பி தந்து உபசரிக்கும் பொறுப்பு மிக்க கடமை கவிஞரின் துணைவியார் வள்ளியம்மையாருடையது. குழந்தைக் கவிஞரைக் காணவந்து இந்த முறுக்கு காப்பியைச் சுவைக்காத இலக்கியவாதிகள், இலக்கிய அன்பர்கள் அரிது.

ஒருமுறை செயற்குழுக் கூட்டத்தையும் அதைத் தொடர்ந்து அறிமுகம் அனுபவம் கூட்டத்தையும் தன் வீட்டில் நடத்த ஓர் உறுப்பினர் விரும்பினார். அதற்கு ஏற்ப அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.அந்த நிகழ்ச்சி நாளன்று காலையில், கவிஞரின் மனைவி வெளியூர் போக இருந்தார். கூட்டத்தை முடித்துக் கொண்டு



கவிஞரும் கூட அன்று இரவு பயணம் செய்ய இருந்தார். வீட்டில் உள்ள மற்றவர்கள் ஏற்கெனவே ஊருக்குக் கிளம்பிப் போய் விட்டார்கள். ஊரில் ஏதோ குடும்ப நிகழ்ச்சி.

கூட்டத்தை வைத்துக் கொள்ள இருந்த அன்பரின் இல்லத்தில் அன்று ஒரு சோக நிகழ்ச்சி. யாருமே அதை எதிர்பார்க்கவில்லை. ஊருக்குக் கிளம்ப இருந்த கவிஞரின் துணைவியார் காதுக்கு விஷயம் எட்டியது. கூட்டத்தைத் தங்கள் வீட்டிலேயே நடத்த கவிஞர் ஏற்பாடுகள் செய்தார். அவரது துணைவியார் தனது பயணத்தை இரவுக்கு ஒத்தி வைத்தார். ஒருசில மணி நேரங்களுக்குள் இப்படி ஒரு கூட்டத்தை உபசரிக்கும் பொறுப்பை சலிப்பு ஏதுமின்றி இன்முகத்துடன் ஏற்கும் பண்பு எல்லோருக்கும் வந்துவிடாது. வழக்கம் போலவே முறுக்கு, காப்பி உபசரிப்புடன் இரண்டு கூட்டங்களும் இனிது நடந்தன.

கணவரின் எந்தப் பிரச்னைக்கும் உடனடியாகக் கைகொடுக்கும் வலது கரமாகக் குழந்தைக் கவிஞரின் துணைவியார் இருந்தார். இலக்கிய மாநாடுகளில் தங்கள் வீட்டுத் திருமணம் போல் அவர் ஓடியாடிப் பரிமாறி பந்தி விசாரணை செய்த நேர்த்தி, மறக்க இயலாத காட்சி. குடும்பப் பொறுப்புகள், பிரச்னைகள் யாவற்றையும் தானே ஏற்று, திறம்பட மனைமாட்சி செய்து கவிஞரை எந்தக் கவலையும் பட வைக்காமல் இலக்கியத் தொண்டாற்ற ஊக்குவித்த பெருமை அந்த மாதரசிக்கே உரியது. வள்ளியப்பாவின் சாதனைகள் உலகறிந்தவை. ஆனால் அந்தச் சாதனைகளை அவர் நிகழ்த்த உந்து சக்தியாக இருந்தது வள்ளியம்மையே என்பதை நெருங்கிப் பழகியவர்களே அறிவார். அண்மையில் மறைந்து விட்ட வள்ளியம்மையின் பிரிவு குழந்தைக் கவிஞரோடு பழகியவர்களுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் தாங்கமுடியாத இழப்பு. வள்ளியப்பாவின் சாதனைகள் பேசப்படும் வரை வள்ளியம்மையின் பெருமையும் அதில் மறைந்து இழைந்து நிலைத்திருக்கும்.

- ரே

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெறும் கதை!



எனக்கு வேண்டாம்!

சிவா மருத்துவமனையில் கூட்டம் அலைமோதியது. டாக்டரைக் காணத் தான் நோயாளிகள் மணிக்கணக்கில் காத்திருந்தனர். டோக்கன் கொடுத்துக் கொண்டிருந்த ஒருவர். ''நூறு டோக்கன் வரை கொடுத்தாச்சு சார்; இது வரை பார்க்கவே இரவு பதினோரு மணி ஆகும். இனிமே இன்னிக்கு டாக்டரைக் காண டோக்கன் தர முடியாது'' என்று கண்டிப்பாகப் பேசி அனுப்பிக் கொண்டிருந்தார்!

டெலிபோன் மணி தொடர்ந்து அலறியது எல்லாம் மற்ற டாக்டர்களின் சந்தேகம்தான். பதில் சொல்லிச் சொல்லி டாக்டர் சிவா அலுத்துப் போனார்! பேசி விட்டு வைப்பதற்குள் இன்னொரு அழைப்பு. உதவியாளர் எடுத்துப் பேசி விட்டு "மெடிகல் கௌன்சிலின் பொன் விழா மாநாடு டெல்லியில் அடுத்த மாதம் நடைபெறுகிறதாம். உங்களைக் கருத்தரங்கில் பேச அழைக்கிறார்கள்" என்று ரிசீவரைக் கொடுத்தார் டாக்டர் சிவாவிடம்.

"நான் கலந்து கொள்ள அங்கு வருவதானால், இரண்டு நாள் ஆகும். என்னையே நம்பியிருக்கும் என் நூற்றுக்கணக்கான நோயாளிகளைத் தவிக்க விடும்படி இருக்கும். என்னால் முடியாது. என் பேச்சை ஒலி நாடாவில் பதிவு பண்ணி அனுப்பிடறேன். எனக்கு இந்த கௌரவமே வேண்டாம். எனக்கு என் நோயாளிகள் தான் முக்கியம்'' என்றார் டாக்டர் சிவா வெட்டு ஒன்று துண்டு இரண்டாக.

''என்னடா எனக்கு வேண்டாம், எனக்கு வேண்டாம்கறே! தூக்கத்தில் ஏதாவது கனவு கண்டாயா?'' என்று அம்மா சிவாவைத் தட்டி எழுப்பினாள்! ஆமாம், பிளஸ் டூ மாணவன் சிவாவின் கனவுதான், அம்மாவால் கலைக்கப்பட்டது!

அப்போ நான் பிரபல டாக்டராகி, ஓய்வு ஒழிச்சல் இல்லாம இருந்தது எல்லாம் வெறும் கனவுதானா! என்று ஏமாற்றம் நிறைந்தவனாக படுக்கையில்

ஜெ.பாலமுருகன்

எழுந்து உட்கார்ந்தான் சிவா. கனவுதான் என்றாலும் மனதுக்கு எத்தனை மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது!

சிவா அம்மாவிடம் தன் கனவை விளக்கிக் கூறினான்.

"இன்றைக்குத்தான் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வு எழுதப் போறே. அதுக்குள்ள பிரபல டாக்டராகி விட்டதா கனவா! இலட்சியம், கனவு எல்லாம் உன்னதமாகத்தான் இருக்கு. ஆனால் அதுக்குத் தகுந்த உழைப்பு வேண்டாமா? கவனத் தைச் செலுத்திப் படிச்சா, கிடைக்காதது எதுவும் இல்லை. நேரமாயிடுச்சி. பத்து மணிக்கு நுழைவுத் தேர்வு இருக்கு. சீக்கிரமா ரெடி பண்ணிக்கிட்டுக் கிளம்பு. கவனமா எழுதி, கனவை நினைவாக்கும் வகையில் மதிப்பெண் எடுத்துக்காட்டு" என்றாள் அம்மா.

"அம்மா, உயர்ந்த மதிப்பெண் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் நான் டாக்டர் படிப்புப் படிக்கப் போறது நிச்சயம்மா. பணம் தர வக்கில்லாதவங்களுக்குத்தான் ஒரே வாய்ப்பு நுழைவுத் தேர்வு. கேட்ட பணத்தை நன்கொடையாத் தந்து எங்கப்பா மேனேஜ்மெண்ட் நிர்வாகக் கொட்டாவில் எனக்குக்



கண்டிப்பா சீட் வாங்கிடுவார். சும்மா, கல்லெறிந்து வைக்கிற மாதிரி நானும் நுழைவுத் தேர்வு எழுதப் போறேன். அவ்வளவுதான்'' என்று பெருமையாகச் சிரித்தான் சிவா.

அவன் பேச்சு, அம்மாவை மட்டும் திகைப்படைய வைக்கவில்லை. சிவாவை, நுழைவுக் தேர்வுக்கு அழைத்துப் போக வந்த அவன் அருமை நண்பன் கணபதி யையும் திகைக்க வைத்தது.

"சிவா, உழைத்துக் கிடைக்கும் வெற்றிக் கனிதான் பெருமைக்கு உரியது; மற்றவர்களுக்குப் பயன்படக்கூடியது. அதனால் உண்மையாக உழைத்து நுழைவுத் தேர்வை எழுத முயற்சி செய்," என்றான் கணபதி.

''உனக்கு வேண்டுமானால் அது கைக்கு எட்டாத கனி. ஆனால் எனக்கு, பணத்தை வீசிப் பறித்து காலடியில் விழ வைக்கப் படும் கனி. பிளஸ் டூ வில் மாநிலத்திலேயே முதல் மாணவனாக வந்திருக்கும் உனக்கு டாக்டர் சீட் கிடைக்கிறதோ இல்லையோ எனக்குக் கண்டிப்பாகக் கிடைக்கத்தான் போகிறது. அதை நீயும் பார்க்கத்தான்



ஆனந்தம் பொங்கட்டும்!



அன்பும் பொங்குக! அமைதி
பொங்குக!
ஆனந்தம் பொங்குக!
பொங்குகவே?
இன்பம் பொங்குக! இரக்கம்
பொங்குக!
ஈகை பொங்குக! பொங்குகவே!

உண்மை பொங்குக! உழைப்பும்
பொங்குக!
ஊக்கம் பொங்குக! பொங்குகவே!
எண்ணம் பொங்குக! எழுச்சி
பொங்குக!
ஏற்றம் பொங்குக! பொங்குகவே!

ஐயம் இல்லாக் கல்வியும்
பொங்குக!
ஐக்கியம் பொங்குக! பொங்குகவே!
ஒழுக்கம் என்பது உயிராய்
எங்கணும்
ஓங்கிப் பொங்குக! பொங்குகவே!

ஔவை கண்ட அழகிய செந்தமிழ்
அமுதம் பொங்குக! பொங்குகவே!
அஃதை எல்லாம் இத் "தை",
நல்கிடும்
அருளும் பொங்குக! பொங்குகவே!

- தளவை. இளங்குமரன்

போகிறாய்" என்றான் சிவா.

கணபதி பேசவில்லை. இருவரும் கிளம்பினார்கள். சிவா எதிர்பார்த்தபடி நுழைவுத் தேர்வில் அவனுடைய ரேங்க் எங்கேயோ போய்விட்டது. இதை எதிர் பார்த்துத் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றில் விண்ணப்பம் போட்டிருந்தான் சிவா. டெலிபோனில் அழைப்பு வந்தது. அவன் போகவில்லை பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு அவன் அப்பா போனார்.

அன்று இரவு, சிவாவின் அம்மா, மொசைக் தரையில் வழுக்கி விழுந்து விட்டாள். ஏற்கனவே அவர் இதய நோயாளி. சிவா அருகில் உள்ள தனி யார் மருத்துவமனையில் சேர்த்தான். அன்று இரவே அம்மா அவனைப் பிரிந்து விட்டாள். அப்பாவுக்குச் செய்தி போனது.

"சிவா, அம்மாவைப் போயும் போயும் இந்த மருத்துவமனையிலா சேர்த்தே? இதில் உள்ள டாக்டருக்கு, டாக்டருக்குப் படிக்க வண்டி வண்டி யாப் பணத்தைக் கொடுத்து சீட் வாங் கித் தந்தது உங்க தாத்தாதாம்ப்பா!" என்று மகனைக் கட்டிக் கொண்டு அழுதார் அப்பா.

"உழைப்பால் கிடைக்கக் கூடிய வெற் றியே உண்மையான பயனைத் தரும்: மகிழ்ச்சியைத் தரும்: பெருமையையும் தரும்" என்று அம்மா சொன்னது சிவா வின் நினைவுக்கு வந்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

"அப்பா, நன்றாகப் படித்து அடுத்த ஆண்டு, இதே நுழைவுத் தேர்வை எழுதி, டாக்டர் படிப்புக்கு சீட் வாங்கிக் காட்டறேன். தெய்வமாகிவிட்ட அம்மா வுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது இது தான். எனக்கு வேண்டாம் இந்த விலைக்கு வாங்கப்பட்ட அட்மிஷன்" என்று கூறியவன், அப்பா பணத்தைக் கொட்டி வாங்கி வந்திருந்த அட்மிஷன் கார்டை, சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்தான்.

வருங்கால டாக்டர் சிவாவை இப் பொழுதே பாராட்டுவோமே

அந்தக் குடும்பத்தில் அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தங்கை தம்பி, பாட்டி தாத்தா, ஸ்வாமி படம், பித்தளைப் பாத்திரம், எவர்சில்வர் பாத்திரங்கள், காஸ் சிலிண்டர், கட்டில், பீரோ, அலமாரி, சோப்பு, சீப்பு, கண்ணாடி, மேஜை, நாற்காலி, பாய், தலையணை, தொட்டில், ஆடை ஆபரணங்கள், பவுடர், மஞ்சள், குங்குமம், கொசு மருந்து, விசிறி, ஊதுவத்தி, எண்ணெய்ச் சட்டி, பாட்டில், அரிசி,

பொங்கல் பண்டிகைக்காக வீட்டுக்காரர்கள் வீட்டைச் சுத்தப்படுத்தி, வெள்ளையடிப்பதில் ஈடுபட்டனர். அன்றைய தினம் சீக்கிரமாகவே சமைத்து வைத்து, சீக்கிரமாகவே சுடச்சுட சாப்பிட மேஜை, நாற்காலிகளில் உட்கார்ந்தனர்.

பொங்கல் பண்டிகை என்றால், சும்மாவா? எவ்வளவு வேலைகள் செய்ய வேண்டும்?

பகற் பொழுது.

வீடு அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது.



மாயன்

பருப்பு, மிளகாய், சர்க்கரை, கோதுமை, துணிமணி, அழுக்கு மூட்டை, பாடப் புத்தகங்கள், பேனா, பென்சில், ப்ளேட், மரச் சாமான்கள, குளவி, மூட்டைப்பூச்சி, எலி எல்லாம் நிரம்பி இருந்தன!

குடும்பத்தாரோடு, இந்த அக்குத் தொக்கு சாமான்கள் பேசும். ஆனால் அந்தப் பேச்சை வீட்டுக் குழந்தைகளால் மட்டுமே கேட்க முடியும்.

ஒருநாள்.

அந்த வீட்டுக் குடும்பத்தார், தம் வீட்டுத் தட்டுமுட்டு சாமான்களை எல்லாம் ஓர் அறையில் குவித்து வைத்தனர்.

மேஜை நாற்காலியை மட்டும் கூடத்தில் விட்டு வைத்தனர்.

அப்பொழுதுதான் மேஜை பேச ஆரம்பித்தது.

"தம்பி.." மேஜை அழைத்தது. நாற்காலி தலையைக் கவிழ்த்துப் பார்த்தது.

"பகல் வெப்பம் என் உடலைப் பொசுக்குகிறது. அதோடு எல்லோரும் கொதிக்கும் சமையலை பாத்திரத்துடன் என் மேல் வைத்துச் சுட்டுத் தள்ளுகிறார்கள்!"

"சிரமம் உனக்கு மட்டுமா? நானும் அவர்களின் இழுப்புக்குத் தேய்ந்து, உட்காரும்பொழுது சுமந்து, கஷ்டத்தோடு பெருமூச்சு விட்டு அவதிபட்டுக் கொண்டிருக்கிறேன், தெரியுமா?"

"அதனால்தான் சொல்லுகிறேன்! வாயேன்! கொஞ்ச நேரம் ஓய்வாக வெளியே போய் உலவி விட்டு வருவோம்! புதிய காற்றை சுவாசித்து உற்சாகம் பெற லாம்! பேசலாம்! பாடலாம்!"


"என்ன உளறுகிறாய்? நம்மால் நடக்க முடியுமா?"

"இரண்டு கால்கள் இருக்கும் மனிதர் கள் நடக்கும்பொழுது, நான்கு கால்கள் உடைய நம்மால் நடக்க முடியாதா? முயற்சி செய்தால் குதிரையைப் போலக் கூட நாம் வேகமாக ஓட முடியும்! தெரி யுமா?

இரண்டும் கிளம்பி விட்டன பொடி நடையாக!

மேஜையும் நாற்காலியும் பேசிக் கொண்டு நடப்பதைப் பார்த்து, கடைத் தெருவே மூக்கில் விரலை வைத்து வியப் பாகப் பார்த்தது.

உற்சாகத்தில் மிதந்து போன அவை, சத்தம் போட்டபடி குலுக்கி சிரித்து, தெருவில் கோணல் மாணலாகத் திரிந்து, அலைந்து, ஓடி, எங் கேயோ இஷ்டத்திற்குப் போய்க் கொண் டிருந்தன!



பகல் கழிந்து மெல்ல மாலை நேரம் கூடியது. இருள் வந்திட தெருவிளக்குகள் எரிய ஆரம்பித்தன.

அதுவரையில் தலைகால் தெரியாமல் சுற்றிக் கொண்டிருந்த மேஜை நாற் காலிக்கு நிலைமை புரிய ஆரம்பித்தது. வீட்டு நினைப்பு வந்தது.

"ஐயோ! வழி தவறி விட்டோமே! வழி மறந்து போச்சே! எப்படி வீடு திரும்புவது? எங்கே இருந்தோம். எந்தத் திசையில் வந் தோம். எதையும் அறிந்து கொள்ளாமல் இப்படி வந்து சிக்கலில் மாட்டிக் கொண் டோமே!" என்று இரண்டும் அழ ஆரம் பித்து விட்டன.

அதுவரையில் மேஜை நாற்காலியின் போக்கையும் பேச்சையும் பார்த்து வியந்த வர்கள் அவைகளின் கஷ்டத்தைக் கேட்டு, உதவி புரிய முன்வரவில்லை. சிலர் மட்டும், "பாவம்! வழி தெரியவில்லை யாம்!" என்று சும்மா முணுமுணுத்து விட்டு, நடக்கலானார்கள்.

யாரோ தம்மை அழைப்பதைப் பார்த்து மேஜையும் நாற்காலியும் தலை நிமிர்ந்தன.

"மேலே பார்க்காதீர்கள். இப்படிக் கீழ தலைகுனிந்து பாருங்கள்!"

இப்பொழுது இரண்டு மூன்று குரல்கள் கேட்டன.

மேஜையும் நாற்காலியும்



குனிந்து பார்த்தன. 'ஆ!' என்று வியந்து கூவின. மேஜையின் அடிப்பரப்பில் மறைந்திருந்த எலியும், குளவியும், நாற்காலி விளிம்புகளில் சுற்றிக் கொண்டிருந்த மூட்டைப்பூச்சியும் தொப்பென்று தரையில் இறங்கி, நிமிர்ந்து நின்று, மேஜை நாற்காலியைப் பார்த்தன.

"நீங்கள் எப்படி, இங்கே, இப்பொழுது வந்தீர்கள்?" – மேஜையும் நாற்காலியும் ஆச்சரியமாகக் கேட்டன.

"நாங்கள் எப்பொழுதும் உங்களோடவேதான் இருக்கிறோம். இரவில் மட்டும் வெளியே வருவோம்" என்று பதில் சொல்லின இரண்டும்.

"அது சரி! வீட்டிற்குத் திரும்ப வழி தெரியுமா?"

"ஓ! நல்லாத் தெரியுமே! ஆனால் ஒரு சிக்கல். உங்கள் அடிப்புறத்திலேயே நாங்கள் வாழ்வதால் தலைகீழாக நடந்தால் தான் எங்களுக்கு வழி தெரியும்! அதுதான் கொஞ்சம் யோசனை செய்கிறோம்..."


சிறிது நேரம் கழிந்தது. எலி, குளவி, மூட்டைப்பூச்சி மூன்றும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தன.
முதலில் எலி பேசியது.

"தெருவின் ஓரமாக – சாக்கடைப் பக்கம் தலைகீழாக நடந்து நான் வழி காட்டுகிறேன். குளவி தலைகீழாகப் பறந்து, நான் யார் கண்ணிலும் படாமல் நடக்க, என்னை எச்சரிக்கை செய்து வழி நடத்தும். மேஜையின் மீது நாற்காலி ஏறி அமர்ந்து கொள்ள வேண்டும்: அப்பொழுதுதான் மூட்டைப் பூச்சி உயரமான இடத்தில் அமர்ந்து, என்னைப் பார்த்துக் கொண்டே, 'உம்... நேராக... உம் வலது, இப்பொழுது இடதுபக்கம் – உம் திரும்பு, உம் செல் என்று வழிகாட்டிக் கொண்டே வரும். நாமெல்லாரும் வீடு போய்ச் சேரலாம்" என்றது எலி.


வேறு வழியே இல்லை என்பதால் எல்லாம் எலியின் யோசனையே ஏற்றுக் கொண்டன.

இப்பொழுது அந்த இருட்டான இரவு நேரத்தில் அந்த மேஜையும் நாற்காலியும் வீடு திரும்புவதை யாரும் கவனிக்கவில்லை. ஏன் என்றால் கடைத் தெருவில் எல்லோருக்கும் வீடு திரும்பும் அவசரம்! வேறொன்றையும் பார்க்கவில்லை.

எல்லாம் ஒழுங்காக வீடு வந்து சேர்ந்தன!



காரணம்



பாபுவின் அப்பா விவசாயி. அவர் மாட்டுத் தொழுவத்தின் அருகே நின்று கொண்டிருந்தார். மாடுகளின் மீது தாவியும் தரையில் உருளுவதுமாக இருந்தது அவர் வளர்த்து வந்த நாய்க்குட்டி!

மாலை 4 மணி. பள்ளியிலிருந்து வந்ததும் "அம்மா- நான் நிறையப் படிக்கணும். எனக்கு நாளை பரீட்சை!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றான் பாபு. புத்தகப் பையை மேஜை மேல் வைத்து விட்டுப் படிக்க ஆரம்பித்தான். அந்தப் பொல்லாத குறும்பு நாய்க்குட்டி, பாபுவைப் பார்த்ததும் ஓடோடி வந்து, அவன் மடிக்குத் தாவியது! பாபு அதைத் தூக்கிக் கீழே விட்டான். அது 'வள் வள்' என்று குரைத்துக் கொண்டே வெளியே ஓடி விட்டது. சிறிது நேரத்தில் விருட்டென்று மறுபடியும் உள்ளே வந்த அந்தக் குட்டிநாய், வழக்கத்துக்கு மாறாக உரக்கக் குரைத்துக் கொண்டே அங்கும் இங்கும் ஓடியது! பாபுவும் பொறுமையுடன் அதை விரட்டிப் பார்த்தான். சாதாரணமாக ஒரு சத்தத்திற்கே ஓடிவிடும் அது, அன்று எத்தனை விரட்டியும் அசையவில்லை! மேலே பார்த்து மீண்டும் மீண்டும் குரைத்தது. சத்தம் காதைத் துளைக்கவே 'அம்மா! இந்த நாய்க்குட்டியை இங்கிருந்து கொண்டு போங்க' என்று கத்தினான் பாபு!

'என்னடா பாபு! வாயில்லா ஜீவனிடம் அன்பா இருக்க வேண்டாமா?' என்று செல்லமாகக் கண்டித்தாள் அம்மா.

'நாளைக்கு எனக்குப் பரிட்சை; இன்னைக்கு இந்த நாய்க்குட்டியோட நான் அன்பா விளையாடிக்கிட்டு இருக்கணுமாக்கும்?' என்று சோகமாக சலித்தான் பாபு!"

'சரி, படிடா' என்று கூறிக் கொண்டே நாய்க்குட்டியைத் தூக்கச் சென்றாள் அம்மா. ஆனால் அது அம்மா கைக்கு அகப்படுவதாக இல்லை! மேலே பார்ப்பதும், மீண்டும் மீண்டும் குரைப்பதுவுமாக இருந்தது! பொறுமை இழந்த பாபு, கூரையில் செருகி இருந்த சாட்டைக் கம்பை எடுக்க வேகமாக எழுந்தவன், திடீரென 'ஆ'-என அலறினான்! அப்பா பதறி அடித்துக் கொண்டு ஓடிவந்தார்!

அரண்டு போய் நின்றிருந்த பாபு கையை மேலே காண்பித்தான்! சாட்டைக் கம்பின் அருகில், ஒரு பாம்பு நெளிந்து கொண்டிருந்தது! அப்பா தேடிப் பிடித்துக் கம்பை எடுத்து வருவதற்குள் பாம்பைக் காணவில்லை! ஆனால், வீட்டின் எல்லை வரை குரைத்துக் கொண்டே ஓடிய அந்த நாய்க்குட்டி, தொழுவத்தைத் தாண்டி அதை விரட்டிவிட்ட பிறகுதான் அதிகமாகக் குரைக்காமல் ஓடோடி வந்து பாபுவின் பக்கத்தில் நின்று தனது வாலை ஆட்டியது! அன்புடன் அதை எடுத்து அணைத்துக் கொண்டான் அவன்.

— அம்மு


வல்லபனின்
வான்யாத்திரை!
கதை, அமைப்பு : ரே
ஓவியம் : சசி
காங்கேயன், விக்ரமன், வல்லபன் மூவரும் சகோதரர்கள்
காங்கேயன் மனைவிக்குப் பயந்தவன்
பிறந்த நாளுக்கு காசுமாலை வேணும். என்ன பண்ணுவீங்களோ தெரியாது.
சரி சரி. கத்தாதே!
விக்ரமன் விதண்டாவாதம் செய்பவன். பெற்றோரிடம்—
என் குதிரை கிழடு தட்டிப் போச்சு. அண்ணன் குதிரை அருமையா இருக்கு!
ஒரு குதிரையில் ஐந்து பேர் பயணித்தால் கிழடுதட்டாமல் என்ன ஆகும்?
அதெல்லாம் தெரியாது. அண்ணன் குதிரையோ, தம்பி குதிரையோ வேண்டும்.
குதிரை கிடைக்கலேன்னால் பசுவை விற்றுக் குதிரை வாங்கிப்பேன்...
இப்படியெல்லாம் மிரட்டாதே!


வீடு நிலம் பிரிச்சுத் தந்தாச்சு. நாங்க இருக்கறது வல்லபனின் வீட்டில். அவன் இல்லேன்னா எங்க கதி என்ன?
பசுவைப் பிரிக்கலையே? அது பொதுவாச்சே? அதுல எனக்கும் ஒரு பங்கு இருக்கே?
பசுவை எப்படிடா பிரிக்க முடியும்?
ஏன் முடியாது? கறக்கற பாலை மூணாப் பிரிச்சுக் கொடுங்க.
வயசான எங்களுக்குப் பால் வேண்டாமா?
அதான் பசுவின் பங்குக்கு, வல்லபனின் குதிரையைத் தரச் சொல்லுங்க.
அண்ணா, அம்மா அப்பாவுக்கு பசு அவசியம். என் குதிரையைத் தரேன்.
நீதாண்டா புத்திசாலி! அப்ப குதிரையை எடுத்துக்கறேன்!
நிலம், நீச்சு, சொத்து பத்து, நகை நட்டு, வீடு வாசல், தோப்பு துரவு எல்லாத் தையும் பிரிச்சுக்கிட் டாங்க. இந்த வயதான அப்பா அம்மாவை மட்டும் முழுசா உங்கிட்டத் தந்துட்டாங் களே!


உங்களையே எங்கே பங்கு கேட்டுடுவாங்களோன்னு பயந்துதான் குதிரையைக் கொடுத்தேன். ரெண்டு அண்ணனும் இல்லேன்னா உங்களைக் காக்க வேண்டியது என் பொறுப்புத்தானே? அப்படி எண்ணிக்கிறேன். மனதை அலட்டிக்காதீங்க.
நாட்டில் மழை பொய்த்தது
வல்லபா, ரெண்டு நாளா எங்களைக் குளிப்பாட்டி விடவே இல்லையே!
மறந்துட்டியா?
கிணறு, தரையா வரண்டு போச்சுப்பா. பசு, குடிக்கத் தண்ணி இல்லாம தவிக்குது. நாமும் ஊரை விட்டுக் கிளம்பணும்.
உங்க அண்ணனுங்க என்னவானாங்க?
அவங்க எல்லாத்தையும் வித்துட்டுப் போய் ஒரு வாரமாச்சாம்!
பெத்தவங்ககிட்ட சொல்லிக்கக்கூட இல்லையே?
எங்களை என்னப்பா பண்ணப்போறே? உனக்குத் தொல்லை வேண்டாம். விட்டுட்டு உன் பாட்டுக்குக் கிளம்பிப் போ.
குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது பெற்றோர் கடமை மாதிரி, பெற்றோரைக் காப்பது வளர்ந்த பிள்ளைகள் கடமை இல்லையா?
நியாயம் சரி. ஆனால், ஆகக் கூடிய காரியமா?



கண்டிப்பா ஆகும் உழவுமாட்டை வித்து கட்டை வண்டி வாங்கிருக்கேன். உங்கள் இருவரையும் வண்டில வைச்சு இழுத்திட்டுப் போறேன்.
எங்களால் உனக்கு எத்தனை கஷ்டம்!
நீங்க இப்படி நினைக்கிறதுதான் கஷ்டமா இருக்கு.
பசுவை என்னப்பா பண்ணப் போறே?
அது இன்னொரு தாய் அம்மா. முடிஞ்ச வரை நடக்கட்டும். முடிய லேன்னா வண்டியில இடம் இருக்கு.
வீரனைப் பத்திக் கேட்கலையே? நான் இல்லாதப்போ உங்களையும் வீட்டையும் அதுதானே கவனிச்சுக்கிட்டது? அதுவும் நம்மோட வரது.
மறுநாள் வல்லபனின் பயணம் தொடங்கியது.
போகின்ற வழியில் இரவில் மரத்தடியில் தங்கினர்.
வல்லபன் கவலையில் மூழ்கினான்.
குடிக்க சொட்டு நீர் கூட இல்லையே! நாளைக்கு என்ன பண்ணுவது? பசுவுக்கு இரண்டு நாளா தண்ணி இல்லை?


திடீரென்று ஒரு குரல்—
வல்லபா! வல்லபா!
யார் பேசுவது!
நான்தான். நீ தங்கியிருக்கும் மரம். நான் பேசறது உனக்கு மட்டும் தான் கேட்கும்! குடிநீருக்காகத் தானே கவலைப் படறே?
ஆமாம்!
இரண்டு நாள் பயணத்தில் குந்தள நாடு இருக்கு. அங்கே மன்னன் பெரிய கோவில் கட்டுகிறான். வேலை கிடைக்கும். அதோடு தினமும் ஒரு குடம் நீரும் கிடைக்கும்.
நன்றி! நன்றி!! இப்பவே கிளம்பறேன்.
இரு, ஒரு நிபந்தனை. ஒண்டிக் கட்டையாகப் போனால்தான் தண்ணீர், வேலை எல்லாம்.
அப்போ எனக்குப் பயன் இல்லை.
நீ பெரிய அசடு. நீ பிழைக்கிறதே பெரும்பாடா இருக்கு. அதுல இந்த கிழம் கட்டை, பசு, நாய்.. இதெல்லாம் தேவையா? உங்க அண்ணன்கள் எத்தனை புத்திசாலிகள்!
இப்படிப்பட்ட மனமுடைய உன் நிழலில் தங்கியிருப்பது கூடப் பெரிய பாவம். எத்தனை துன்பம் வந்தாலும் இவர்களைக் கைவிட மாட்டேன்.


சரி, சரி, கோபப்படாதே! இன்னொரு இடம். அந்த சரிவில் உள்ள பாதாளக் கிணற்றில் ஐநூறு படி இறங்கினால் சுசிவுப்பாறை இருக்கு.
என்ன?
குடத்தில் பாதியை என் வேரில் விட வேண்டும். இந்தா குடம்!
அதில் துண்டைப் போட்டால் சிறிது நேரத்தில் நனையும். ஒரு குடத்தில் பிழி. இப்படி விடியும் வரை ஒரு குடம் நீரைச் சேகரிக்கலாம். ஒரு நிபந்தனை...
வல்லபன் பாடுபட்டு ஒரு குடம் நீரை எடுத்து வந்தான்.
இந்தா உனக்குப் பாதி!
நன்றி வல்லபா. உன் பங்கு நீர் எத்தனை இருக்கு?
நான்கு குவளைதான் இதுவாவது கிடைக்க வழி சொன்னாயே! நன்றி.



பெற்றோரை எழுப்பி—
குடியுங்க. இனிமே எப்பக் கிடைக்குமோ?
நீ குடிச்சியா வல்லபா?
குடிச்சாச்சு?
வல்லபா, பொய் சொல்றியே!
லட்சுமி இது உனக்கு!
வீரா. இது உனக்கு!
பிழைக்கத் தெரியாத வல்லபா, சீக்கிரம் என் கிளையில் உட்கார்.
வல்லபன் மரத்தில் ஏறி கிளையில் உட்கார்ந்தான்!




மரம் இறக்கை முளைத்து வானில் பறந்தது!
கைலாசத்தை வலம் வந்தது!
மேக மண்டலத்தைக் கடந்து மரம் பறந்தது!
பாற்கடலை வலம் வந்தது!
பிரும்ம லோகத்தை வலம் வந்தது!



இந்திர சபையில் இறங்கியது!
வா வல்லபா. கைலாசத்தையும், பாற்கடலையும், பிரும்ப லோகத்தையும் ஒரே நாளில் தரிசித்த முதல் புண்ணியன் நீதான்!
உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்?
தேவர்க்கெல்லாம் அரசனே, மாதமும்மாரி மழை பொழிய வேண்டும். நாடு செழிப்பாக இருக்க வேண்டும். நல்லவர் ஆட்சி நடைபெற வேண்டும்.
வல்லபா, நீ மரத்தில் பறந்தபோது வீசிய மணல் சூறாவளியால் உன் பெற்றோர், பசு, நாய் எல்லாம் மாண்டு விட்டனர். இந்த வரத்தால் நீ அவர்களைப் பிழைக்க வைக்கலாம். யோசித்து வரத்தைக் கேள்.
பெற்றோரும், பசுவும், நாயும் என்னைப் பொறுத்தவரை முக்கியம் தான். ஆனால், நாட்டு நலம் குறுக் கிடும்போது முதலில் நாடுதான். நான் கேட்ட வரத்தையே அருளுங்கள்!
அப்படியே ஆகட்டும்!


மரம் பூமியில் பழைய இடத்தில் இறங்கியது!
வல்லபா, நான்தான் கற்பக மரம். தெய்வங்கள்கூட, மனிதர்கள் கேட்டால்தான் வரமருளுவார்கள். ஆனால், நினைத்ததுமே நடத்தி வருபவன் நான் என்று அகம்பாவம் கொண்டிருந்தேன். அதனால் முனிவரின் சாபத்திற்கு ஆளாகி, பூவுலகம் வந்தேன்.
எனக்கு மன்னிப்பே கிடையாதா?
கடமையைப் புறக்கணிக்காத, மனித நேயம் மிக்க, சுய நலமே இல்லாத மனிதன் ஒருவனை ஏற்றிக் கொண்டு, மும்மூர்த்திகளையும் தரிசிக்க வைத்தால் சாபம் விலகும்.
முனிவர் சொன்ன நல்ல மனிதனுக்காக பல நூறு ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் நீங்கள் வந்தீர்கள். என் சாபம் நீங்கியது.


உன் பெற்றோரும், பசுவும், நாயும் இதோ உயிர் பெற்று விட்டார்கள்.
நான் தேவலோகம் கிளம்புமுன் இதோ என் பரிசு... இது அமிர்தம். உண்பவர்களுக்கு இறப்பே இல்லை. ஒரு நிபந்தனை... இதை பசுவுக்குக் கூடத் தரலாம். ஆனால், நாய்க்கு மட்டும் தரக் கூடாது!
என் வீரனுக்குத் தரமுடியாத அமிர்தம் எனக்குத் தேவையில்லை. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.
இதிலும்கூட உயர்ந்தவன் என்பதைக் காட்டி விட்டாய்! ஆயிரம் கற்பக மரங்கள் கூடினால் கூட ஒரு வல்லபனுக்கு ஈடு இணையாக முடியாது. எனக்கு விடை கொடு!
கனமழை பொழிந்தது. பஞ்சம் பறந்தது. வல்லபன் செய்த தியாகத்தால்!
கருத்து: கற்பக புராணம்.







ஆலமரம்

அதோ பார் ஆலமரம்
அழகுமிக்க ஆலமரம்

களைப்பு மிகுந்து வருவோருக்கு
கருணை நிழலாம் ஆலமரம்



வண்ண வண்ணப் பறவைகள்
வந்து தங்கும் ஆலமரம்

சிவப்பு வண்ணப் பழங்களை
சிரித்தே தாங்கும் ஆலமரம்

காற்றில் அசைந்து ஆடியே
கவலைகள் போக்கும் ஆலமரம்

வலிமை வாய்ந்த விழுதினால்
வாழ்ந்து நிற்கும் ஆலமரம்!


-ஜோ.சேவியர்,
உளுந்தூர்.

நாய்!

வாலை வாலைச் சுருட்டி
வாஞ்சை காட்டும் நாயாம்!
வாலை ஆட்ட எவரும்
வந்தால் விரட்டும் நாயாம்!

ஆடு மாடு வந்தால்
அதிரக் குரைத்து விரட்டும்
வீடு வாசல் காத்து
வந்து வாலை ஆட்டும்!

-வானதி, சென்னை-94





புள்ளி மான்

புள்ளி மானைப் பார் பார்!
புல்லைத் தின்னும் பார் பார்!
துள்ளி ஓடும் பார் பார்!
தொட்டால் விலகும் பார் பார்!

அருவி நீரை அருந்திடும்!
அங்கும் இங்கும் திரிந்திடும்!
உருவம் நம்மைக் கவர்ந்திடும்!
உவகை நமக்குப் பொங்கிடும்!

வேங்கை கண்டால் ஓடிடும்!
வேகமும் அதிகம் கூடிடும்!
பாங்குடன் குட்டி மானையே
பாலை ஊட்டி வளர்ந்திடும்!

-பொன்.குமார்,
சேலம்-6







பூனைக்குட்டி


எந்தன் அன்புப் பூனைக்குட்டி
எலியைப் பிடிக்கும் பூனைக்குட்டி


எட்டித் தாவும் பூனைக்குட்டி
எங்கள் நண்பன் பூனைக்குட்டி

புலியைப் போன்ற பூனைக்குட்டி
பாலுக்கு அலையும் பூனைக்குட்டி

கவிஞர் பாடத் துடிக்கின்ற
கட்டிக் கரும்பாம் பூனைக்குட்டி!

-என்.கே.நாகராஜன்,
நரசிபுரம்







தென்னை

மரங்களில் உயர்ந்த மரமிதுவாம்
மக்கள் போற்றிடும் மரமிதுவாம்

சிறந்த பயனைத் தருமிதுவாம்
சான்றோர் பாடிய மரமிதுவாம்

கிளைகள் இல்லா மரமிதுவாம்
கூரைக்கு உதவும் மரமிதுவாம்

களைப்பை போக்கும் இளநீரை
குலையாய் வழங்கும் மரமிதுவாம்

சமைக்க உதவும் தேங்காயை
சரடு திரிக்கக் கயிறையும்

கலைப்பொருள் துடைப்பம் மிதியடி
கணக்கின்றித் தந்திடும் மரமிதுவாம்!

-சி.சித்திக் ஆய்ஷா
சென்னை-76

அருவி

இரண்டு மலை நடுவிலே
இருக்கு இருக்கு பாருங்க
புரண்டு விழும் அழகினைப்
பார்க்க பார்க்க ஆசைதான்!

தொலைவில் இருந்து பார்த்திட்டால்
தொட்டுப் பார்க்கத் தோன்றிடும்
மலையில் ஏறிப் பார்த்திட்டால்
மலைக்க வைக்கும் அருவியாம்.

இயற்கை அன்னை சிரிக்கிறாள்
இன்ப நடனம் ஆடுறாள்
வியக்க வைக்கும் காட்சிகள்
வாரி வாரித் தருகிறாள்

-எஸ்.ஏ.மணிவண்ணன்,
சென்னை-49



குட்டிக் குரங்கு


குட்டிக் குட்டிக் குரங்குகளாம்!
குட்டிக் கரணம் போட்டிடுமாம்!
கட்டைக் குச்சிப் பிரம்புகளைக்
கையில் எடுத்தே ஆடிடுமாம்!

குட்டித் தாயின் உடல்தனையே
வெளவால் போலத் தொங்கிடுமாம்!
கட்டித் தனத்துடன் தாய்மார்பில்
சுவைத்துப் பாலைக் குடித்திடுமாம்!

சீண்டிக் கோபம் கொண்டாலே
சீறிப் பற்கள் காட்டிடுமாம்!
பூந்தி பழங்கள் கொடுத்தாலே
பூரிப் போடு வாங்கிடுமாம்!

தானாய் நாமும் தின்றாலே
தட்டிப் பறித்துத் தின்றிடுமாம்!
காண வாருங்கள் குழந்தைகளே
கந்தன் பழநி மலைமீதே!

கெங்கை பாலதா
சின்னக்கலையம்புத்தூர்.





வாழைப்பழம்

சின்னஞ் சிறிய வாழைப்பழம்;
சிறுவர் விரும்பும் வாழைப்பழம்.
மூக்கனி மூன்றில் ஒன்றாகும்
மூத்தோர் விரும்பும் வாழைப்பழம்
மஞ்சள் நிறமாம் வாழைப்பழம்
மக்கள் விரும்பும் வாழைப்பழம்.
பச்சை நிறமாம் வாழைப்பழம்
பாலர் விரும்பும் வாழைப்பழம்
வாங்கிப் பாரு வாழைப் பழம்;
வழவழப்பான வாழைப்பழம்.

து.பழனி,
வரிக்கல்

குருவிக் கூடு

எங்கள் வீட்டு மரத்திலே
எட்டுக் குருவி கூடுகள்

சின்னஞ் சிறிய குருவிகள்
சேர்ந்து கட்டிய கூடுகள்


கைகள் இல்லாக் குருவிகள்
கட்டி வைத்த கூடுகள்!

மழையை எண்ணிக் குருவிகள்
முயன்று கட்டிய கூடுகள்!

ஊக்கம் ஒற்றுமை இருந்திட்டால்
உலகே கைக்குள் அறியுங்கள்!

சு.கண்ணகி
மிட்டூர்





சிலந்தி!

எட்டி எட்டி நடக்கும் - இந்த
எட்டுக் காலுப் பூச்சி!
கிட்ட வந்தால் துடிக்கும்- இந்த
முட்டைக் கண்ணுப் பூச்சி!

குச்சி கொண்டு அடித்தால்-அங்கே
குதித்து ஓடப் பார்க்கும்!
உச்சிக் கொம்பில் ஏறும் -தினம்
உமிழ்நீர் வலையில் ஊரும்!

சிலந்தி பின்னும் வலைபோல்-தாம்
சேவை செய்ய வேண்டும்!
கலந்து எதையும் பேசி - நல்ல
கடமை செய்ய யோசி!

நிலவை பழநியப்பன்,
புதுக்கோட்டை.

"எங்க பாட்டி"

பாட்டி எங்க பாட்டி
பாயில் காலை நீட்டி
கற்பனை யைக் கூட்டி
கதைகள் சொல்லும் பாட்டி.

பாட்டி எங்க பாட்டி.
பல்லி ல்லாத பாட்டி.
பருப்புச் சோறு ஊட்டி
பாசம் காட்டும் பாட்டி.

அன்பை முழுதும் காட்டி
அணைத்துக் கொள்ளும் பாட்டி
பட்டுச் சொக்கா மாட்டி
பள்ளி அனுப்பும் பாட்டி.

வெ.சிவநேசன்.
இராமச்சந்திராபுரம்.





அக்கா

அக்கா மிகவும் நல்லவள்!
அன்பு உள்ளம் கொண்டவள்!
சொக்கா போட்டு மகிழ்பவள்!
சோறு ஊட்டி வளர்ப்பவள்
பள்ளி செல்ல எனக்குமே
பலவித உதவி செய்பவள்
அள்ளி அள்ளி முத்தமே!
ஆர்வ மாகக் கொடுப்பவள்!
அக்கா ஒரு ஆசான் போல்
அறிவுரையும் சொல்பவள்!
எக்காலமும் துணையாக
இருந்து உயர்வு தருபவள்!

தேனி.மு.ருக்மணி

சேர்ந்து சாப்பிடுவோம் சர்க்கரைப் பொங்கல்!

குழந்தைகளுக்கு முதன்முதலில் அறிமுகமாகும் விலங்குகளில் கன்றுக் குட்டி, நாய், பூனை ஆகிய மூன்றுக்கும் முதல் இடம் உண்டு. நகரங்களில் பசு வைத்து வளர்ப்பவர்கள் மிகக் குறைவு. ஆனால், கிராமங்களில் பசு வளர்ப்பவர்கள் அதிகம். பசு இருந்தால், கண்டிப்பாகக் கன்றுக்குட்டி இருக்கும்.

கன்றுக்குட்டி விளையாட்டாகத் துள்ளித் துள்ளிக் குதித்து ஓடி வருவது அழகான காட்சி. ஆனால், நகரத்துக் குழந்தைகளுக்கு அந்தக் காட்சி மிரள வைப்பதாக இருக்கும்! "முட்டித் தள்ளி விடப் போகிறது. நகர்ந்து கொள்" என்று அதைத் தவிர்க்கவே முயல்வார்கள்.

கன்றுக்குட்டி என்றால் துள்ளித் துள்ளி ஓடி விளையாட வேண்டும். அப்போது தான் அது ஆரோக்கியமான குட்டி. இந்தத் துள்ளி விளையாடுவது அதன் உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஓர் ஆரோக்கியமான பயிற்சியும்கூட. தலைக் கயிறைப் பிடித்துக் கொண்டு, இதைத் துள்ள விட்டுத் தெருக்களில்கூட ஓடி வருவார்கள். இப்படி வருபவர்கள் பெரும்பாலும் குழந்தைகளாகத்தான் இருப்பார்கள்.

மற்ற எந்த விலங்குகளையும்விட கன்றுக் குட்டியின் வளர்ச்சி விரைவாக இருக்கும். பிறந்து இரண்டு மூன்று மாதங்கள் வரைதான் அதனுடன் குழந்தைகளால் விளையாட முடியும். நகரங்களில், வீட்டு நாய்களுக்குக் கொடுக்கும் அக்கறையை, கிராமங்களில் கன்றுக்குட்டிகளுக்குத் தருவார்கள். புதிய மனிதன் நெருங்கினால் அது கத்தும்.

பொங்கல் சமயத்தில் வீட்டில் ஒரு சின்னக் கன்றுக்குட்டி இருந்து விட்டால் அதன் பெருமையையும் மகிழ்ச்சியும் தனிதான். சர்க்கரைப் பொங்கலை அதற்குத் தங்கள் கையால் தர, போட்டா போட்டியே நடக்கும்! குழந்தைகளுடன் தானும் ஒரு குழந்தையாக இருந்து அவர்களுக்குச் சரியாகக் கன்றுக்குட்டிகள் துள்ளி ஆட்டம் போடுவதும், அதட்டினால் அருகே வந்து நிற்பதும், முகத்தை நிமிர்ந்து பார்ப்பதும் நேரில் கண்டு களித்தே ரசிக்க வேண்டியவை.



கன்றுக்குட்டியைப் பாடாத குழந்தைக் கவிஞர்கள் இடையாது. கவிமணியின் "தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு" பாடல் தாய்ப்பாசத்தையும் பசுவின் பெருமையையும் உணர்த்தி, குழந்தைகளை இன்னமும்கூட மகிழ்விக்கிறது.

பசுமாடுகள் தெருக்களில்கூடச் சுற்றித் திரிவதை நகரத்தின் தெருக்களில் காணலாம். ஆனால் கன்றுக்குட்டிகளைக் காண்பது அரிதாகி வருகிறது. கன்றுக்குட்டிகளைக் காண நகரக் குழந்தைகள் மிருகக் காட்சி சாலைகளுக்குப் போக வேண்டிய காலம் வெகு விரைவில் வந்து விடும்!

அட்டையில் கன்றுக்குட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அதைப் பொங்கல் சாப்பிட அழைப்பது சிறுமி பிரேமா. வண்ணப்படங்கள்: ஸ்ரீஹரி.

திக்... திக்... கதைகள்!

பயமின்றிப் படியுங்கள்!



சத்தியம் போடுமா பேய்!

சென்ற இதழ் தொடர்ச்சி....

ரமணி, தனது பாணா காற்றாடியால் செல்வத்தின் பேந்தா காற்றாடியை அறுத்து விட, அறுந்த காற்றாடி பேய் பங்களா என்று அழைக்கப்படும் ஏரிக்கரை பங்களாவில் போய் விழுந்து விடுகிறது. அதை எடுத்து வர யார் தடுத்தும் கேளாமல் ரமணி ஏரிநீரில் குதிக்க, நண்பர்கள் ஸ்ரீதரும், செல்வமும் தொடர்கிறார்கள். வாயைத் திறந்து வந்த முதலையைக் கண்டு மூவரும் தங்கள் வாழ்க்கை முடிந்து விட்டதாக முடிவு கட்டுகிறார்கள்.

இனிமேல் படியுங்கள்...

மூவரும் நடுங்கினார்கள்!

"முதலை நம் மூன்று பேரையும் பார்த்து விட்டது. யாரை முதலில் வந்து முழுங்கப் போகிறதோ!'' என்றான் ஸ்ரீதர்.

மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன.

"மழை வேற ஆரம்பிச்சிடுச்சி. இந்த முதலை யாரைப் புடிச்சு முழுங்குன்னும் தெரியலே! நாம்ப நீந்தலாமா வேண்டாமான்னும் தெரியலே" என்றான் செல்வம்.

மழை வலுத்தது.

"என்னடா இது சனியன் புடிச்ச முதலை! அப்படியே வாயைத் திறந்த படி அதே கோலத்தில் இருக்கே! ஒருவேளை வயிறு ஏற்கெனவே ரொம் பிடிச்சோ என்னவோ!'' என்று ரமணியும் தவித்தான்.

நேரம் ஆமையை விட மெதுவாக நகர்ந்தது!

"ரமணி, முதலையைக் காணோம்!'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் திடீரென்று கத்தினான் ஸ்ரீதர். இருவரும் திரும்பிப் பார்த்தனர். முதலை இருந்த இடம் காலியாக இருந்தது!

"ஒருவேளை தண்ணீர்க்குள்ளேயே வந்து காலைப் புடிக்குமோ என்னவோ!'' என்ற சந்தேகத்தைக் கிளப்பினான் ஸ்ரீதர்.

"ரமணி, மழையோ கொட்டுது. செல்வத்தின் காற்றாடி கண்டிப்பா நனைந்திருக்கும். இனிமே நாம போய்

சின்னபாபு



அபாயத்தை சந்திச்சு அதை எடுத்து வந்தாலும், இனிமேல் அது செல்வத்துக்குப் பயன்படாது. பேசாமல் திரும்பி விடலாம். நாளை காலையில் வந்து பார்த்து அது உருப்படியா இருந்தா எடுத்துக் கொண்டு போகலாம்" என்றான் தொடர்ந்து ஸ்ரீதர்.

"நானும் இதையேதான் நினைச்சேன்" என்றான் செல்வம். ரமணி மறுக்கவில்லை. மூவரும் கரைக்குத் திரும்பி, பிரிந்து வீட்டிற்குப் போனார்கள். பெற்றோர்கள் ஒரு திருமணத்திற்காக வெளியூர் போயி ருந்ததால் ரமணியைக் கேள்வி கேட்க யாருமில்லை.



அன்று இரவு ரமணிக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு …படுத்தான். எத்தனைதான் கண்களை இறுக மூடிக் கொண்டாலும், மனக் கண்ணில் பயங்கரமாக வாயைப் பிளந்து கொண்டு வந்த முதலையே தோன்றியது. முதலையை ஆட்கொல்லி என்பார்களே. அவர்கள் மூன்று பேரையும் பார்த்த பிறகும் கூட அது வாயைப் பிளந்ததே தவிர, அருகே கூட வரவில்லையே! அதோடு, திடீரென்று மறைந்தும் விட்டதே! ஆட்களைக் கண்ட பிறகும் கூட, ஒன்றும் செய்யாது இத் தனை சாந்தமாக முதலை இருந்ததைக் கதைகளில் கூடப் படித்த தில்லையே! ஒருவேளை அது பொம்மை முதலையாக இருக்குமோ?



துணிச்சல் மிக்க ரமணிக்கு அந்த ஏரிக்கரை பேய் பங்களாவுக்கு ஒருமுறையாவது போய்ப் பார்க்க வேண்டும் என்று தணியாத ஆசை. செல்வத்தின் காற்றாடியைச் சாக்காக வைத்துப் போய்விட்டு வரலாம் என்று அவன் முயற்சித்தது நடக்க வில்லையே. அங்கே பேய்கள் ஆடு கிறதாம்! காட்டுக் கத்தலாம்! அந்தப் பேய்களைச் சந்தித்து 'ஹலோ!' சொல்லும் அருமை யான வாய்ப்பு இப்படித் தட்டிப் போய் விட்டதே!

திடீரென்று யாரோ தன்னை உற்றுப்பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படவே, ரமணி திரும்பிப் பார்த்தான். ஜன்னலுக்கு வெளியே பரவி இருந்த இருட்டில் மண்டை யோடு, மார்பு, கை கால்களோடு ஒரு எலும்புக் கூடு நின்று கொண்டிருந்தது! மிதப் பதைப் போல் நகர்ந்து வந்த அது ஜன்னலுக்கு அருகே நின்று அவனைப் பார்த்தது!

பேய் பிசாசு களில் நம்பிக்கை இல்லாத ரமணி யின் மனம் கூடப் 'படபட'வென்று அடித்துக் கொண் …டது. உடல் பயத்தால் வியர்த்தது. விளக்கைப் போட முயன்றான். கால் கள் நகர மறுத்தன!

"யார் நீ?" என்று மிகவும் கஷ்டப்பட்டுத்



துணிவை யெல்லாம் திரட்டிக் கொண்டு கேட்டான்.

"ஹ்ஹ்ஹஹ்ஹா....!" – பேய்தான் சிரித்தது. அந்தச் சிரிப்பு இரத்தத்தைச் சுண்டி இழுத் தது. உடம்பே மரத்துப் போன மாதிரி ஒரு நிலை!

"தெரியலே...! ஏரிக்கரை பேய் பங்களாவின் தலைமைப் பேய் நான்தான்!"

மனிதக் குரலும் அல்லாமல் இடி இடிப் பதைப் போல் பேசியது பேய்.

"என்ன வேணும்?" – ரமணி நாக்கு குழறக் கேட்டான்.

''உனக்கு என்ன வேணும் கேள்?'' பேய்தான் அட்ட காசமான சுடுங்குரலில் கேட் டது.

"செல்வத்தின் காற்றாடியைக் கொண்டு வந்து தர முடியுமா?"

"சத்தியமாத் தரேன். ஆனால், என் வழிக்கு வராதே. இது என் எச்சரிக்கை!"

பேய் அப்படியே காற்றில் மிதந்து சென்று மறைந்து விட்டது! அரைமணிக்குப் பிறகுதான் ரமணி சுயநினைவுக்கு வந்தான். எழுந்து விளக்கைப் போட் டான். டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு தோட்டத் துப்பக்கம் ஓடினான். பயனில்லை! பேய் எங்கே ஓடிப் போச்சோ!


நேரம் கழித்துத் தூங்கியதால் காலையில் எழுந்திருக்க நேரமாகி விட்டது. எழுந்ததும் அவன் கண்ணில்பட்டது, செல் வத்தின் பேந்தா காற்றாடிதான்! துளிகூட நனையாமல், அழுங் காமல், அப்படியே ஜன்னலுக்குக் கீழே கிடந்தது அது! யார் போட்டிருப்பார்கள்? சந்தேகமே இல்லை. பேயேதான்! சத்தியம் வேற போட்டுட்டுப் போச்சே! பேய் நினைத்தால் முடியாததும் உண்டா?

ரமணிக்கு ஒரே குழப்பமாகவும் இருந்தது; திகைப்பாகவும் இருந்தது. அத்தை வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்குக் கிளம்பினான். பள்ளி சாப்பாட்டு இடைவேளையின் போது நண்பர் களிடம் எல்லாவற்றையும் கூறினான்.

"திகைப்பா இருக்கே! பேய் இல்லைன்னு சொல்லித் திரியற உன்னைத் திருத்தவே பேய் தானா வந்திருக்கு... தான் மனது வைத்தால் எதையும் செய்ய முடியும் என்பதை உணர்த்தவே, செல்வத்தின் பேந்தா காற்றாடியைக் கொண்டு வந்திருக்கு. இனிமே தன்வழியில் தலையிடாதேங்கறதுக்கு இது எச்சரிக்கை," என்றான் ஸ்ரீதர்.

''எனக்கு என்னவோ இது எல்லாமே சுத்த மோசடிச் செயலா இருக்கும்னு தோணுது," என்றான் ரமணி.

"எலும்புக்கூடு உருவில் பேயை நீயே பார்த் திருக்கே. அதோட பேசியிருக்கே. இன்னமும்





நம்ப லேன்னா எப்படி?" என்றான் செல்வம்.

"அந்தப் பேய் பங்களாவுக்கு நம்மை வர விடாது தடுக்கவே யாராவது இப்படியெல்லாம் பண்றாங்களோன்னு தோணுது. இன்னமும் கூட, பேயை நம்ப நான் தயாரா இல்லே. ஏரிக்கரையைச் சுற்றிக் கொண்டு இன்று இரவு நான் அங்கே போய்ப் பார்க்கத்தான் போறேன்" என்றான் ரமணி.

"நானும் வரேண்டா" என்றான் ஸ்ரீதர். "நானும்" என்றான் செல்வம்.

நண்பர்கள் அந்த ஏரிக்கரை பேய் பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்த போது மணி பதினொன்று. மை பூசின கரும் இருட்டு. காம்பவுண்டுக்குள் காடாக மண்டியிருந்த செடிகள் அவர்களுக்கு மறைந்து கொள்ள உதவியாக இருந்தன.

உள்ளே படிகளில் ஏதோ உருண்டு வரும் சத்தம். டார்ச்சை எடுத்துக் கொண்டு ரமணி உள்ளே போனான். நண்பர்கள் பின்னே வந்தனர். நான்கு மண்டை ஓடுகள் மாடிப் படிகளில் உருண்டு வந்தன!

"வீல்" என்று பயத்தால் கத்தினான் ஸ்ரீதர். ரமணிக்குக் கூட அந்தக் காட்சி பீதியைத் தந்து உடலை நடுங்க வைத்தது.

"எனக்கென்னவோ பயமா இருக்கு ரமணி. நமக்கு எதுக்கு வேண்டாத வம்பு? வா போயிடலாம்" என்று ரமணியின் கையைப் பிடித்து இழுத்தான் செல்வம்.

"இரு செல்வம். இந்த மண்டை ஓடு தானாக எப்படி உருண்டு வரும்! இதில் என்னவோ மர்மம் இருக்கு" என்று கூறிய ரமணி, ஒரு மண்டை ஓட்டைத் தூக்கிப் பார்த்தான். அதற்குள் ஒரு சுண்டெலி உயிருடன் கட்டப்பட்டுக் கிடந்தது! எல்லா மண்டையோடுகளும் அப்படித் தான்!

மேலே "மியாவ்" சத்தம் கேட்டது. நான்கு பெரிய பூனைகள் ஓடி வந்தன!

"தெரிஞ்சுதா? மண்டை ஓட்டைப் பேய் உருட்டி அனுப்பலே. பூனைங்க உருட்டி அனுப்பியிருக்கு" என்றான் ரமணி.

இருட்டில் மூழ்கிக் கிடந்த அந்த பங்களாவுக்குள் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. வாசல் இரும்புக் கதவு பூட்டியபடி இருந்ததால் மூவரும் காம் பவுண்டுச் சுவர் ஏறிக் குதித்து உள்ளே வந்திருந்தனர்.

கனத்த இருளையும், ஆழ்ந்த அமைதியையும் குலைத்துக் கொண்டு திடீரென்று ஒரே பேய்ச் சிரிப்பு! "ஹஹ் ஹஹ்ஹா...ஹா!" என்று தொடர்ந்து அதே ஒலியில் ஒரு வரிசைச் சிரிப்பு! அதைக் கேட்டபோதே உடம்பெல்லாம் நடுங்கியது. சிரிப்பு பங்களா முழுவதும் பரவி எதிரொலித்தது.

"ரமணி, போய்டலாண்டா" என்று கெஞ்சினான் ஸ்ரீதர்.

"பயமா இருந்தா காதைப் பொத்திக்கிட்டு இங்கேயே இருடா. எனக்கு என்னவோ இதெல்லாம் மனித வித்தையாகத் தான் தோணுது" என்று கூறிய ரமணி, டார்ச்சோடு மாடிப்படி ஏறினான். சிரிப்பொலி அங்கிருந்துதான் கேட்டது.


மாடிப்படியை ஒட்டியிருந்த அறையில் இருந்துதான் சிரிப்பு வந்தது. ரமணி டார்ச் அடிச்சு ஜன்னல் வழியாகப் பார்த்தான். சுவரில், மர ஸ்விட்ச் போர்டுக்கு மேலே ஒரு சின்னப் பொந்து. அதற்கு மெல்லிய கம்பி வலை போடப்பட்டிருந்தது. ஒரு ஆந்தை ஸ்விட்ச் போர்டில் உட்கார்ந்து கம்பி வலைக்குள் கொத்திக் கொண்டிருந்தது. அது ஸ்விட்ச் போர்டில் காலைப் பதித்திருந்த இடத்தில் பிளக் ஸ்விட்ச் கீழ்நோக்கி 'ஆன்' னில் இருந்தது. டார்ச் ஒளிபட்டதும், ஆந்தை படபடவென்று சிறகை அடித்து வெளியே வந்தது. உடனே ஸ்விட்ச் நிமிர்ந்து 'ஆப்' ஆகிவிட்டது! சிரிப்பொலி நின்று விட்டது! கீழே நாற்காலியில் 'ஆன்' பண்

"காலண்டரை நான் கண்டுபிடிக்காம போயிட்டேன்."

"ஏண்டா?"

"கண்டு பிடிச்சிருந்தா, அதிகமா லீவு கிடைக்கும் மே மாசத்துக்கு மட்டும் 31 நாளுக்கு பதிலா 50 நாள் வச்சிருப்பேன்."

- பா. ஜெயக்குமார்.



ணப்பட்ட நிலையில் ஒரு டேப்ரிக்கார்டர்! கம்பி வலைக்குள் நிறைய எலிகள்! அந்தை எலிகளுக்காகத்தான் அங்கே வந்து, ஸ்விட்ச் சில் காலைப் பதித்து 'ஆன்' பண்ணியிருக் கிறது!

ரமணி, நண்பர்களை அழைத்து வந்து காட்டினான். ஒவ்வொரு அறையாகத் திறந்து பார்த்துக் கொண்டே வந்தனர்.

மூலையில் இருந்த பூட்டப்பட்ட ஓர் அறைக்குள், கம்பி அடித்த வலை ஜன்னல் வழியாகப் பார்த்தபோது மூவரும் பயத்தால் உறைந்தனர். நடுவே ஒரு பெட்டி. அதன் மேல் ஏராளமான பாம்புகள்!

"இந்தப் பாழடைந்த பங்களாவை யாரோ சட்டப்புறம்பான காரியங்களைச் செய்யப் பயன்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக இந்தப் பாம்பு அறைக்கும் அவர்களுடைய சட்டவிரோதச் செயல்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். இங்கே யாரும் எளிதில் வந்து விடக் கூடாது என்பதற் காகவே இந்த மாதிரி பேய்க் கதைகளைக் கட்டி விட்டிருக்கிறார்கள். பேய் அலறுவது போல் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்," என்றான் ரமணி.


யாரோ புதிய மனிதர்கள் வரும் பேச் சுக் குரல் கேட்டது. மூவரும் ஒரு பெரிய பீரோவுக்குப் பின்னால் மறைந்து கொண்ட னர்.

வந்தவர்கள் மூன்று பேர். மெழுகு வத்தியை ஏற்றி விட்டுப் பேச ஆரம்பித் தனர்.

"இன்னும் இரண்டு பெட்டி இருக்கு. இதைக் காலி பண்ற வரைக்கும் கொஞ்சம் உஷாரா இருந்துட்டால் நாம கோடீஸ் வரர்கள்தான். நல்ல காலமா மழை பேஞ்சு ஏரில தண்ணி நிறைஞ்சு இருக்கு. அதனால யாரும் சீக்கிரமா இங்கே வரமாட்டாங்க," என்றான் தாயத்து அணிந்தவன்.

"இந்தக் காலத்து வாண்டுப்பசங்க என்னமா துணிச்சலா இருக்குங்க! அந்த ரமணிப்பய மாதிரி துணிச்சக்கட்டையா ரெண்டு பசங்க சேர்ந்தால் கூட நம்மபாடு திண்டாட்டம்தான்! பாரேன்... அந்த பிளாஸ்டிக் முதலைக்குக் கூட அவங்க அஞ்சலையே!" என்று வியந்தான் கொடு வான் மீசை.

"ஆனாலும் நான் காஸ் பலூன்ல, ரேடியம் எலும்புக்கூட்டை வரைஞ்சு, டேப் ரிகார்டரைப் போட்டு அவனைப் பயப் படுத்தியதுல, பையன் ஆடிப் போயிட்டான். நல்லகாலமா, 'பேந்தாகாத் தாடி அறுந்து



"ஏண்டா கலர் கலரா மூக்குக் கண் ணாடி வச்சிருக்கே?"

"எங்க வீட்டு ப்ளாக் அண்ட் ஒயிட் டீ.வி. பார்க்கிறப்ப போட்டுக்க!"

—பொறையாறு கானா, கணேசன்

வந்து விழுந்ததும் அதை எடுத்து வைச்சிட் டேன். அது சமயத்துல கைகொடுத்தது" என்றான் புஸ்தி மீசை.

"என்னமோ, இது ஒற்றுமையாய் பண்ண வேண்டிய காரியம்பா. யாராவது கொஞ்சம் அசந்தால் கூட கம்பி எண்ண வேண்டியது தான். சரி, நாளைக்கு யார் யாருக்கு எத் தனை தேவை? சொன்னால்தானே நான் பாம்பு அறைக்குப் போய், பெட்டியைத் திறந்து எடுத்து வர முடியும்?" என்று கேட் டான் தாயத்து.

"எனக்கு இரண்டாயிரம்,"

"எனக்கும் இரண்டாயிரம்."

"சரி எனக்கும் இரண்டாயிரம்" என எழுந்தான் தாயத்து.

"யப்பா, கதவை நல்லா இழுத்து கெட் டியா மூடிக்கிட்டு பெட்டிலேருந்து நோட்டை எடு. உன் பாம்புங்க ஏதாவது வெளியே வந்தால் அவ்வளவுதான்" என்று எழுந்தான் கொடுவாள்.

வந்த சுவடுதெரியாமல் நண்பர்கள் பஞ் சாகப் பறந்தனர்.

"இவங்க கள்ளநோட்டு ஏஜெண்டுங்க. கள்ளநோட்டுப் பெட்டியை பாம்பு அறைக் குள் வைச்சிருக்காங்க. அது தீரும் வரை இந்தப் பங்களாவுக்குள் யாரும் வந்து விடக் கூடாதுன்னு பேய்க்கதை கட்டி விட்டிருக் காங்க. புத்திசாலித்தனமா எலும்புப் பேய் உருவம், பேய்ச் சிரிப்பு எல்லாம் பண்ணி பயப்படுத்தறாங்க" என்று சொன்னான் ரமணி.

அடுத்த நாள் செய்தித்தாள்களில் நண்பர் கள் மூவரும் இடம்பெறப் போவதை சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டுமா?



GOKULAM

The monthly magazine for children

JANUARY '97 ISSUE

GOKULAM
47, JAWAHARLAL NEHRU ROAD,
EKKADUTHANGAL,
CHENNAI - 600 097.


செந்திலும் பானுவும் அவசரம் அவசரமாக வெளியே கிளம்பினர். இருந்தாலும் எதையோ மறந்து விட்ட அப்பா, அதை எடுத்துக் கொண்டு போகத் திரும்பி வந்தபோது, இருவரும் அவர் பார்வையில் சிக்கி விட்டனர்.

"பைனாகுலர், காமிராவோடு இருவரும் எங்க கிளம்பி விட்டீர்கள்?''

நாளைக்குக் கிளம்பிடப் போறாங்க. அதுக்குள்ள ஏதாவது நாலு இடத்தைப் பார்க்கணும்னு ஆசை தோணாதா? உங்களை ஆபீஸ்ல இறக்கிட்டு, நான் இவங்களோட ஒரு மணி நேரம் இருந்து ஏரிக்கரையைச் சுற்றிக் காட்டிட்டு வரேங்க" என்று பரிந்து பேசினார் பிச்சை. அவர் அப்பாவின் ஜீப் டிரைவர் உதவியாளர் எல்லாம்.

"சரி சரி, ஆனால் படகுக் கட்டணம், கேமிரா கட்டணம் எல்லாத்தையும் ஒழுங்கா கட்டி என்கிட்ட ரசீதைக் காட்டணும்'' என்றார் அப்பா.

''ரசீதைக்



பாம்புத்தாரா 'கேட்ச்' பிடிக்குமா?

ரேவதி

"ஏரிக்குத்தாம்பா. மழை பேஞ்சு புதுத் தண்ணி நிரம்பியிருக்காமே?'' - மென்று விழுங்கிக் கொண்டு செந்தில்தான் பதில் கூறினான்.

"நாளைக்கு சென்னைக்குத் திரும்ப றோமேப்பா? புதுத் தண்ணி நிறைஞ்சு ஏரி எப்படி இருக்குன்னு பார்க்க ஆசை. அதான்....'' என்று இழுத்தான் பானு.

"என்னங்கையா, பசங்க லீவுக்கு வந்து ஒரு வாரமாச்சு. மழையைக் காரணம் காட்டி எங்கேயும் போக விடலே. இதோ

கொண்டு வந்து காட்ட றேங்க. யார்கிட்டேயும் வனத்துறை அலுவலரின் பிள்ளைகள்னு எந்தச் சலுகையும் கேட்க மாட்டேன் சரி தானே?'' என்று சிரித்தார் பிச்சை.

செந்திலும் பானுவும் ஜீப்பில் ஏறிக்கொள்ள, ஜீப் கிளம்பியது.

ஏரியில் நீர் தளும்பி அலையடித்தது. புது நீர் ஆனதால் செம்மண் நிறத்தில் நீர் இருந்தது. பணத்தைக் கட்டி பிச்சை

படகை ஓட்டி வந்தார். செந்திலும் பானுவும் ஏறிக் கொண்டனர். படகு கிளம்பியது.

ஏரியின் எல்லாப் பக்கமும் கண்ணுக் கெட்டிய தூரம் வரை பச்சைக் கரை கட்டியது போல் காணப்பட்ட விதம்விதமான மரங்களில் புத்தம்புது பறவைகள். வானில் வட்டமிடுவதும், அம்பு போல் இறங்கி மீன்களைக் கொத்திப் பறப்பதும், குஞ்சுகளுக்கு இரை கொடுப்பதுமாக பறவைகள் சுறுசுறுப்புடன் இயங்கின.

"எத்தனை அழகான விதம்விதமான பறவைகள்!'' என்று பைனாகுலரில் பார்த்து வியந்தனர் அண்ணனும் தங்கையும்.

"ஐயையோ பாம்பு! தண்ணிப் பாம்பு!" என்று கத்தினாள் பானு.

செந்தில் பைனாகுலரை வாங்கிப் பார்த்தான். உண்மைதான். அவர்கள் படகுக்குச் சற்று முன்னால் தலையை நீர் மட்டத்துக்கு மேல் நீட்டிக் கொண்டு, உடலை நீருக்குள் நெளித்தபடி ஒரு கரிய தண்ணீர்ப் பாம்பு விரைந்து கொண்டிருந்தது.

"பிச்சை சார், ஏரித் தண்ணீரில் பாம்பு கூட இருக்குமா! மீன்களைப் புடிச்சு சாப்பிட்டு விடாது?" - கேட்டது பானுதான்.

"நீங்க பார்த்தது பாம்பு இல்லை. பாம்புத் தாரா என்ற பறவை. இதன் நீண்ட கழுத்தையும் சின்னத் தலையையும் பார்த்தால் பாம்பு மாதிரியே இருக்கும். அதனால்தான் பெயரே பாம்புத்தாரா. இங்கே தண்ணீரில் பாம்பே கிடையாது. இருந்தால் பறவைங்க உயிரோட விட்டு வைக்காது. கரைகளில் புதர்களில் வேணுமானா இருக்கலாம்'' என்றார் பிச்சை.

அவர்கள் வியப்பு மாறாமல் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, திடீரென்று நீருக்கு மேல் ஒரு கொழுத்த மீன் எம்பியது. நீருக்குள் இருந்து யாரோ வீசியடித்தது போல் வெளியே வந்தது அது. மீன் நீருக்குள் விழுமுன், சின்னத் தலை கொண்ட ஒரு பறவை தன் கூரிய அலகை விரித்தது. மீன் சரியாக அதன் அலகுக்குள் விழுந்தது!

"என்ன பிச்சை சார்! என்னவோ கிரிக்கெட்டுல பந்தை கேச் பிடிக்கிற மாதிரி கீழே வி ம் மீனை இத்தனை சரியாக அலகை விரித்துப் பிடித்துக் கொண்டு விட்டதே!" என்றாள் பானு.

"அடடா! அருமையான காட்சி. படமெடுக்காது கோட்டை விட்டு விட்டேனே!" என்றான் செந்தில் உண்மையான வருத்தத்துடன்.

"தண்ணீர்ப் பாம்புன்னு உங்களை மயங்க வைத்த அதே பாம்புத்தாராதான் இது. மீனைப் புடிச்சதும் இப்படித்தான் நீருக்கு வெளியே தலையை நீட்டி, மீனை ஆகாயத்தில் தூக்கி எறிந்து, அலகை விரித்துப் பிடித்து விழுங்கும். தூக்கி எரியும் மீனை, குறிதவறாது அலகை விரித்துப் பிடித்துக் கொள்ளும்" என்றார் பிச்சை.

"பிச்சை சார். மறுபடி பாம்புத்தாரா இப்படி மீனைத் தூக்கி எறிந்து காட்ச் புடிக்குமா? போட்டோ எடுக்க முடியுமா?" என்று ஏக்கத்துடன் கேட்டான் செந்தில்.



"கண்டிப்பா எடுக்கலாம் தம்பி. காமிராவைக் கிளிக் பண்ணத் தயாரா வைச்சுக்க. இங்கே நிறைய பாம்புத்தாரா இருக்கு."

"சிகி.... சிகி... சிகி..." என்ற சத்தம் கேட்டது.

"தம்பி, இந்த 'சிகி' சத்தம் பாம்புத் தாராவினுடையதுதான். அதோ பார், அந்த மரக்கிளையில் சிறகுகளை விரித்து வெயில் காய்கிறதே.. அதுவும் பாம்புத் தாராதான். நனைந்த சிறகைக் காய வைத்துக் கொள்கிறது" என்றார் பிச்சை.

"நீந்தும் பறவைகளுக்கு, சிறகில் நீர் ஒட்டாது என்பார்களே! இதுக்கு மட்டும் எப்படி நீர் ஒட்டியது?"

"தம்பி, நீ சொல்றது பொதுவான விதி. இது பாம்புத் தாராவுக்குப் பொருந்தாது. இது பாதி நேரம் நீரில் இருந்தாலும், இதன் சிறகுகள் நீரில் நனையக்கூடியவைகளே."

தலைக்கு மேல் இருந்த வளைந்த கிளை ஒன்றில் இலைகளுக்கு நடுவே ஒரு பாம்புத்தாரா உட்கார்ந்து இருந்ததை பிச்சை பார்த்து, செந்திலுக்குக் கண் ஜாடை காட்டினார். படகு அந்தக் கிளைக்குக் கீழே வரும்போது, செந்தில் காமிராவைக் கிளிக் செய்தான்.

அந்த மெல்லிய 'கிளிக்' சத்தம் பறவையை எச்சரித்து விட்டது. அடுத்த வினாடி, பறவை அலங்கோலமாக மரத்தில் இருந்து நீரில் விழுந்து மிதந்து சென்றது!

"பிச்சை சார்! நான் இதை ஒன்றுமே பண்ணலையே! வெறுமே காமிராவைக் கிளிக் தானே பண்ணினேன்! இது இப்படிக் கீழே விழுந்து நீரில் மிதந்து போகுதே! செத்துப்



அறிவியல் உண்மைகள் :

* பாம்புத் தாராவின் விலங்கியல் பெயர் ANHINGA RUFA. இது PELECANI-FORMS வரிசையில், PHALACRO-CORACIDAE குடும்பத்தைச் சேர்ந்தது.
* உடல் கருப்பு, கழுத்து வெல்வெட் மாதிரி. அலகு கொம்பு நிறம். தலை மட்டும் சாக்லேட் வண்ணம். முதுகில் வெளிர் பட்டைகள். வால்நுனி விறைப்பாக அரை வட்ட வடிவம்.
* மீனுக்குச் சரியாக நீந்தும். நன்கு பறக்கும். நீருக்குள் நீந்தும்போது பார்க்க பாம்பு போலவே இருக்கும்.
* உணவு மீன் மட்டுமே. கழுத்து அமைப்பு விசித்திரமானது. அலகில் மீனைப் பிடித்தால், தூக்கி எறிந்து, அலகை விரித்து தொண்டைக்குள் தள்ளிக் கொள்ளும்.
* இறந்து விட்டதைப் போல் நடித்து தப்பி விடும்! ஆனால் இறகு உதிர் காலங்களில் பறக்க முடியாது சிக்கிக் கொள்ளும்.
* கழுத்தில் வளையத்தை இறுக்கி மீன் பிடிக்கப் பழக்குகிறார்கள்.
* நீருக்கு அருகே மரக்கிளைகளில் கூடு கட்டும். கூடுகள் அலங்கோலமாக இருக்கும். 3-4 முட்டைகள். ஆண் பெண் இரண்டும் முட்டை, குஞ்சுகளைக் காக்கும்

போச்சா?" - கண்கலங்கப் பதறியபடி கேட்டான் செந்தில்.

பிச்சை சிரித்தார்.

"இந்தப் பாம்புத்தாரா பொல்லாதது தம்பி. இதுக்கு தந்திரங்கள் நிறையத் தெரியும். இப்படி யாராவது அருகே வந்து விட்டால் செத்துப் போனது மாதிரி நடிக்கும். அத பார்..."

பிச்சை காட்டிய திசையில் - நீரில் மிதந்து சென்ற பாம்புத்தாரா திடீரென்று எழுந்து சிறகை விரித்துப் பறக்க ஆரம்பித்தது!

"அப்பாடி! இப்பத்தான் நிம்மதி ஆச்சு!" என்றான் செந்தில்.

"பிச்சை சார், இந்தப் பாம்புத்தாரா இப்படித்தான் ஒவ்வொரு முறையும் தான் பிடிச்ச மீனை மேலே தூக்கிப் போட்டு கேட்ச் புடிச்சு சாப்பிடுமா?"

"நல்ல கேள்விம்மா. பாம்புத்தாராவுக்கு மிக நீண்ட மெல்லிய பாம்பு உடல் கழுத்து. இதன் கழுத்து முன் எலும்புகள் வினோதமான அமைப்புக் கொண்டவை. இது மீனுக்கு சரியா வேகமா நீந்தும். மீனைத் துரத்திப் பிடிக்கும்போது, வேகமாக ஓடும் மீன், இதன் அலகில் நன்றாகச் சிக்கிக் கொண்டு விடும். அப்போ அதைத் தொண்டைக்குள் கொண்டு வர இந்த மாதிரித் தூக்கி எறிந்து காட்ச் புடிக்கும்."

"இதை வளர்க்க முடியுமா?"


"என்னம்மா அசட்டுக் கேள்வி! உணவுக்காக நீரில் வாழும் பறவையை வீட்டில் வளர்ப்பது நடக்கக்கூடியதா? ஆனால், வங்காளத்தில் இந்தப் பறவைகளைக் கூட்டமாக வளர்த்து மீன் பிடிக்கப் பழக்கியிருக்கிறார்கள். இவை நீருக்குள் மீன்களைத் துரத்திச் சென்று பிடிக்கும். அதனால் இவைகளின் கழுத்தில், ஒரு இரும்பு வளையத்தைப் போட்டு இறுக்கிப் பூட்டி விடுவார்கள். இவை அலகு நிறைய மீன்களைப் பிடித்து விடும். இரும்பு வளையம் இருப்பதால், பிடித்த மீன்களை இவைகளால் விழுங்க முடியாது. அலகுக்குள் கைவிட்டு மீன்களை எடுத்துக் கொண்டு வளையத்தை விலக்கி விடுவார்கள். இரண்டொரு மீன்களைக் கூலியாகத் தந்து விழுங்க வைப்பார்கள்!"

"கேட்கவே பாவமாக இருக்கே!"

"இதைவிடப் பரிதாபம் இருக்கும்மா. இவை ஆண்டுக்கு ஒருமுறை இறக்கைகளை உதிர்க்கும். புது இறகுகள் முளைக்க சில வாரங்கள் ஆகும். அதுவரை இவைகளால் பறக்க முடியாது. அந்தக் காலத்தில் மிக எளிதாக இவைகளைப் பிடித்து வருவார்கள். அடிக்கடி சிறகுகளை வளர விடாமல் வெட்டி மீன் பிடிக்க வைத்துக் கொள்வார்கள்."

"பாம்புத் தாரான்னு பெயரைக் கேட்டதும் பயமா இருந்தது. இதன் குறும்புகளை அறிந்ததும் வியப்பா இருந்தது. இவை சந்திக்கும் ஆபத்துக்களை நினைத்தால் கண்ணீர் வருது!" என்றாள் பானு.

பம்பாய் மாமா!



சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் அர்ஜுனுக்கு விடுமுறை. வழக்கமாகத் தன்னுடைய தோழன் விவேக்குடன்தான் விடுமுறை நாட்களைக் கழிப்பான் அவன். அர்ஜுனை விட வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன் விவேக். அவர்கள் வீட்டில் அவன் ஒரே செல்லப் பிள்ளை. கையில் எப்போதும் பாக்கெட் மணி வைத்திருப்பான். ஏதாவது நொறுக்குத் தீனி தின்று கொண்டே இருக்க வேண்டும் அவனுக்கு! அவன் கூடவே சுற்றும் அர்ஜுனுக்கும், தெருவில் விற்கும் எந்தத் தின்பண்டமாக இருந்தாலும் வாங்கித் தருவான். சைக்கிளில் இரண்டு பேருமாக ஊரைச் சுற்றுவார்கள்.

ஆனால், நாளை முதல் பத்து நாட்களுக்கு அர்ஜுனால் விவேக்குடன் ஊர் சுற்ற முடியாது; நினைத்ததை வாங்கிச் சாப்பிட முடியாது.

பம்பாயிலிருந்து அர்ஜுனுடைய மாமா பத்து நாள் விடுப்பில் வந்திருந்தார். மாமா பம்பாயில் ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறார். அர்ஜுன் மீது கொள்ளைப் பிரியம் அவருக்கு. மாமா என்றால் அவனுக்கும்தான் உயிர்.

பள்ளிக் கூடம் விட்டு வந்ததும் சினிமா, சர்க்கஸ், பீச் என்று அர்ஜுனை வெளியில் எங்காவது கூட்டிக் கொண்டு போவார். அதனால் அவன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

பம்பாயிலிருந்து அர்ஜுனுக்கு மாமா விதம் விதமாக நல்ல நல்ல சட்டைகளெல்லாம் வாங்கி வந்திருந்தார். ஒவ்வொன்றாக, அவைகளைத் தன் பெட்டியிலிருந்து அவர் எடுத்துக் காட்டிய போது அர்ஜுனுக்கு மிகவும் பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

அடுத்த நாள் சனிக்கிழமை. விவேக் எப்படியும் வருவான். அவனிடம் பம்பாய் மாமா வாங்கி வந்திருக்கும் சட்டைகளையெல்லாம் காண்பிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் அர்ஜுன்.

அன்று இரவு தூங்கும் போது கூட அர்ஜுனின் கனவில் கலர் கலராக அந்த உடைகள்தாம் வந்தன!

சனிக்கிழமை என்றால் அர்ஜுன் எழுந்திருக்க ஏழு, ஏழரை மணி ஆகி விடும். ஆனால், அன்று மாமா அவனைத் தூங்க விடவில்லை. தான் எழுந்த உடனேயே அவனையும் எழுப்பி விட்டார்.

"வீட்டுப் பாடம் ஏதாவது இருந்தால் குளிச்சுட்டு வந்து செஞ்சுடு. நாம வெளியிலே போறோம்" என்றார் பம்பாய் மாமா அவனிடம்.

எங்கே என்று அர்ஜுன் கேட்கவில்லை.

ஒன்பது மணிக்குள்ளாகவே குளித்து, டிபன் சாப்பிட்டு, வீட்டுப் பாடத்தையும் செய்து முடித்து விட்டான். விவேக் வந்தால் அவனிடம் பம்பாய் மாமா வாங்கி வந்திருப்பதை எல்லாம் காட்டலாம். ஆனால், அதற்குள் வெளியில் கிளம்பி விடுவோமோ என்னவோ...?

அவன் நினைத்து முடிக்கவில்லை.

"அர்ஜுன்!... ரெடியா?" என்று கேட்டுக் கொண்டே வந்து நின்றார் மாமா.

"புது சட்டையை எடுத்துப் போட்டுக்கோ அர்ஜுன்!" என்றாள் அக்கா. மாமா வாங்கி வந்திருந்த சுடிதாரை அணிந்து கொண்டு ரொம்பவும் அழகாக இருந்தாள் அவள். அம்மாவும் புதுப் புடைவை கட்டிக் கொண்டு ஒரு

பீஷ்மன்

கூடையில் பெரிய டிபன் கேரியர், இன்னும் என்னென்னவோ, எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா...! மீனா...! எல்லோருமேவா உண்டு?'' என்று கேட்டுக் கொண்டே உடை மாற்றிக் கொண்டான் அர்ஜுன்.

அப்பா ஊரில் இல்லை. அலுவலக வேலையாக மதுரைக்குப் போயிருக்கிறார்.

நீல பேண்டும் டீ ஷர்ட்டும் போட்டுக் கொண்டு வந்து நின்றான் அர்ஜுன்.

"எங்கே மாமா போகப் போறோம்?"


"மகாபலிபுரம்! நீ போனதே இல்லையாமே! அதனாலே..."

''ஐயா!'' என்று துள்ளிக் குதித்தான் அர்ஜுன். அவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

மாமா ஏற்பாடு செய்திருந்த காரில் பயணம் செய்யும் போது ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது அவனுக்கு. மாமாவின் பக்கத்தில் உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தான்.

பாண்டவர் ரதங்கள், பாறைச் சிற்பங்கள், கடற்கரைக் கோவில்... என்று எல்லா இடமும் சுற்றிப் பார்த்தனர். காரில் வந்திருந்தாலும் ஒவ்வொரு இடத்தையும் சுற்றிப் பார்க்க நடந்து நடந்தே போனதில் கால் வலித்தது.

பம்பாய் மாமா நல்லவர்தான். ஆனால், தின்பதற்கு வழியில் எதுவுமே வாங்கித்தர மாட்.



டேன் என்கிறாரே என்று அர்ஜுனுக்கு வருத்தமாக இருந்தது.

பசியாலும், நடந்த களைப்பாலும் சோர்ந்து போய் ஒரு பாறையில் உட்கார்ந்து விட்டான் அவன்.

"என்னடா கண்ணா, பசிக்க ஆரம்பிச் சுடுத்தா?" என்று கேட்டார் மாமா. "ஆமாம்" என்று அவன் தலையை ஆட்டினான்.


"டிபன் காரியரையெல்லாம் எடுங்க! இப் படி இங்கேயே உட்கார்ந்து சாப்பிடலாம்" என்று சொல்லிக் கொண்டே டிக்கியைத் திறந் தார் மாமா.

"இங்கே நல்ல ஓட்டல் எதுவும் இல் லையா?" என்று ஏமாற்றத்துடன் கேட்டான் அர்ஜுன். பெரிய ஹோட்டலில் போய்ச் சாப்பிட வேண்டும் என்று அவனுக்குக் கொள்ளை ஆசை.

"அர்ஜுன்! சாப்பாட்டு விஷயத்திலே ரொம்பக் கவனமா இருப்பேன் நான். வெளி யிலே, கண்ட இடத்திலே எதையும் வாங்கிச் சாப்பிடக் கூடாது. பம்பாயிலே கூட நானே தான் சமைச்சு சாப்பிடறேன். தீராது என்று முடியாத நிலைமையிலேதான் ஓட்டலுக்குப் போவேன். இப்ப வீட்டிலிருந்தே சாப்பாடெல் லாம் தயார் பண்ணி எடுத்து வந்திருக் கோம்" என்று பெருமையுடன் சொல் னார் மாமா.

தெருவில், நடமாடும் கடை களில் எல்லாம் விவேக்குட சேர்ந்து தான் தின்பண்டங்





"பாடம் நடத்தும் போது தூங்கின உனக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்னு நீயே சொல்லு?"

"அந்த பாடத்தை இன்னொரு தடவை நடத்திடுங்க சார்!"

— சீர்காழி வி. ரேவதி

வாங்கித் தின்பது தெரிந்தால் மாமா என்ன சொல்வாரோ என்று நினைத்துக் கொண்டான் அர்ஜுன்.

ஸ்வீட், பூரி கிழங்கு, பொங்கல், வடை, தயிர் சாதம் சட்னி, அப்பளம், சிப்ஸ் என்று அம்மா கொணர்ந்திருந்த சாப்பாட்டு வகைகள் அமிர்த மாகத்தான் இருந்தன.

என்றாலும்....

வீட்டுச் சாப்பாடுதான் எப்போதும் இருக்கிறதே! அம்மாவைக் கஷ்டப்படுத்தி, இதையெல்லாம் தயார் செய்து எடுத்துக் கொண்டு வர வேண்டுமா என்ன? ஜாலியாக எல்லோருமாக ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிடாமல்....

இந்த விஷயத்தில் மாமாவைப் பற்றி அர்ஜுனுக்குக் கொஞ்சம் வருத்தம்தான்.

திரும்பும் போது மாலை ஆகி விட்டது. எல்லோருக்கும் இளநீர் மட்டும் வாங்கிக் கொடுத்திருந்தார் மாமா. வேறு எதுவும் வெளியில் வாங்கித் தரவில்லை.

ஊருக்குத் திரும்ப, காரில் ஏறி உட்கார்ந்ததுமே தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது அர்ஜுனுக்கு. அப்படியே தூங்கிப் போய் விட்டான். வீட்டு வாசலில் வந்து கார் நின்ற போதுதான் கண் விழித்தான்.

ஞாயிற்றுக் கிழமை. விவேக் கட்டாயம் வருவான் என்று அவன் எதிர் பார்த்தான். விவேக்கிடம் பெருமையடித்துக் கொள்ள அவனிடம் நிறைய விஷயங்கள் இருந்தன. என்ன காரணமோ, விவேக் வரவேயில்லை. மாமா வந்திருக்கும் போது, இருக்கின்ற லீவு நாளில் கூட முழுதுமாக அவருடன் இராமல், விவேக்கைத் தேடி அவன் வீட்டிற்குப் போவதற்கும் தயக்கமாக இருந்தது.

அன்று சாயங்காலம் மாமா அவனை பீச்சுக்குக் கூட்டிக் கொண்டு போனார். சாதாரணமாக அவன் விவேக்குடன் பீச்சுக்கு வந்தால் பேல் பூரி, பானி பூரி, பஜ்ஜி, மாங்காய் தேங்காய் பட்டாணி சுண்டல் என்று ஏதாவது வாங்கித் தின்று கொண்டே இருப்பான் அவன். ஆனால், மாமா ஏதும் வாங்கித் தரவில்லை!

அலையில் காலை நனைத்துக் கொண்டு நிற்பதற்குத்தானா பீச்சுக்கு வந்தோம் என்று தோன்றியது அர்ஜுனுக்கு.

வாய்விட்டுக் கேட்கவும் சங்கடமாக இருந்தது அவனுக்கு. என்ன செய்ய? மாமா பேசுவதைக் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருந்தான்.

மறுநாள் பள்ளிக் கூடம் போனதும் அர்ஜுனின் கண்கள் விவேக்கைத்தான் தேடின. விவேக் அன்று வரவில்லை! என்ன ஆயிற்று அவனுக்கு?

அர்ஜுனுக்கு வகுப்பில் பாடத்தில் கவனம் செல்லவில்லை.

பகல் - இடைவேளையின் போது, விவேக் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருக்கும் ரமேஷிடம் விசாரித்தான்.

"உனக்குத் தெரியாதா அர்ஜுன்? சனிக்கிழமை விவேக்கிற்கு ரொம்பவும் உடம்பு சரியில்லாமல் போய் வீட்டுக்குப் பக்கத்து மருத்துவமனையில் சேர்த்திருக்காங்க. ஏதோ சாப்பாட்டில் கலப்பட விஷமாம்; வாந்தி வாந்தியா எடுத்து, உடம்பில் நீர்ச்சத்தே ரொம்பக் குறைஞ்சிடுத்தாம். நான் போய்ப் பார்த்தேன். குளுகோஸ் ஏத்திக்கிட்டிருந்தாங்க" என்றான் ரமேஷ்.

அர்ஜுனுக்கு மிகவும் கவலையாக இருந்தது.

"இப்ப எப்படிடா இருக்கான்? தெரியுமா?" என்று கேட்டான்.

"நேத்து சாயங்காலம் வீட்டுக்குக் கூட்டி வந்துட்டாங்க. ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்திட்டு ஸ்கூலுக்குப் போகட்டும்னு டாக்டர் சொல்லி இருக்காராம். அதனாலேதான் அவன் இன்னிக்கு வரலை" என்று சுரேஷ் விவரித்தான்.

விவேக்கோடு போயிருந்தால் அவனுக்கும் இதே கதிதான் ஆகியிருக்கும். நல்ல காலம், மாமா வருகையால் அவன் தப்பித்துக் கொண்டான். மாமா என்றதும், அவருடைய வெளியில் கண்ட கண்டதையெல்லாம் வாங்கிச் சாப்பிட மறுக்கும் அவரது கொள்கை நினைவுக்கு வந்தது. எத்தனை பாதுகாப்பான; ஆபத்தைத் தவிர்க்கும் கொள்கை!


'இனிமேல் தெருவிலே கண்ட கண்ட தின்பண்டங்களை வாங்கித் தின்னக் கூடாதுடா என்று விவேக்கிடம் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

பறத்தல்

ஆழி



சிறகுகளை இயக்கும் தசைகளும், கழுத்துத் தசைகளும் பறவைகளுக்கு வலிமையானவை. மார்புத் தசைகள் பெரியவை. பறவைகளின் மொத்த உடல் எடையில் மார்புத் தசைகள் ஐந்தில் ஒரு பங்கு. எலும்புகள் இலேசாக இருந்தாலும் உறுதியானவை. அதனால் தான் பறவைகளால் களைப்பில்லாமல் பறக்கமுடிகிறது.



பறவை பறப்பதற்கு இறக்கைகளுடன் வாலும் அவசியம். பறவை பறக்கும்போது சமநிலைப் படுத்துவது வால் தான். வால் இல்லாவிட்டால் பறவையால் பறக்கமுடியாது. பறவையின் இறகுகள் கொம்புப் பொருளால் ஆனவை.



மிகவும் குறைந்த வேகத்தில் பறக்கும் பறவை 'பர்ன் ஆந்தை.' அது பறப்பது மணிக்குச் சுமார் 22 கி.மீ. தான்! அதனால்தான் அது இறக்கையை விரித்து வைத்துக் கொண்டே தூங்கும் — உடனே பறக்க!



பறவைகளில் மிக வேகமாகப் பறப்பது 'வாத்து ராஜாளி.' அது பறக்கும் வேகம் மணிக்குச் சுமார் ௨௮௮ கி.மீ!





பறவைகள் இறக்கைகளை அசைத்துத்தான் பறக்கின்றன. ஆனால், கழுகு அரைமணி நேரம்கூட இறக்கைகளை அசைக்காமல் பறந்துகொண்டே யிருக்கும்!

பறப்பதை நிறுத்தாமல், தொடர்ச்சியாகப் பறக்கும் பறவை 'கோல்டன் ப்ளோவர்'. அது கிழக்குக் கனடாவிலிருந்து தென் அமெரிக்காவுக்குச் சுமார் 3840 கி.மீ. தூரத்தை ஒரேயடியாகக் கடந்துவிடும்!

பறக்கும்போது, மிக வேகமாக இறக்கைகளை அடித்துக் கொள்ளுகிற பறவை 'ஹம்மிங் சிட்டு'! அது ஒரு நிமிடத்திற்குச் சுமார் 70 தடவைகள் இறக்கைகளை மடக்கி விரிக்கிறது!






பறக்கும் உயிரினங்களில், குறைந்த தூரத்தில், அதிக வேகம் பறப்பது 'டீர் பாட்' என்னும் ஈ. அது பறக்கும் வேகம் மணிக்கு சுமார் 1280 கி.மீ!

பறவைகளில் சிறிது தூரம்கூட பறக்க முடியாதவையும் இருக்கின்றன. இறக்கைகள் போதிய வளர்ச்சியடையாமைதான் இதற்குக் காரணம். இந்தப் பறவைகள், தரையில் வேகமாக ஓடும்போது இவற்றின் வளர்ச்சியடையாத இறக்கைகளும் வாலும் திசை திரும்ப சுக்கான் போலப் பயன்படுகின்றன. அவ்வளவுதான். உலகில் மிகவும் பெரிய பறவையான நெருப்புக்கோழி, சுமார் 2.75 மீட்டர் உயரமும் 75 கிலோ எடையும் இருக்கும். ஆனால் பறக்க முடியாது. நன்றாக ஓடும். வேகம்: மணிக்குச் சுமார் 96 கி.மீ!






வீட்டுக்கோழியின் அளவுள்ள நியூஜிலாந்துப் பறவையான 'கிவி' யினாலும் பறக்க முடியாது. இதற்கு இறக்கைகளும் கிடையாது, வாலும் கிடையாது!



நியூகினியாவிலுள்ள 'காஸாவரி'யினாலும் பறக்க முடியாது. ஆனால், தொந்தரவு செய்கிற ஒரு மனிதனைத் தன் பலம் பொருந்திய கால்களால் பயங்கரமாக உதைத்துத் தாக்கிக் கொன்றுவிடும்!



தென் அமெரிக்காவிலுள்ள 'ரியா' என்னும் பறவையும் பறக்காது. பறக்க முடியாவிட்டாலும் குதிரையைவிட வேகமாக ஓடும்! நெருப்புக் கோழி இனத்தைச் சேர்ந்தது இது!




அண்டார்ட்டிகா, நியூஜிலாந்து பிரதேசங்களில் உள்ள பறக்காத பறவை 'பெங்குவின்'. 1·25 மீட்டர் வரை உயரம் இருக்கும். இந்தப் பறவை துடுப்பு போன்ற இறக்கைகளால் மணிக்குச் சுமார் 65 கி.மீ. வேகத்தில் நீந்தும்!




ஆஸ்திரேலியப் பறவை 'ஈ-மு'. நெருப்புக் கோழி இனத்தைச் சேர்ந்தது. 1·75 மீட்டர் உயரம் இருக்கும். பறக்காது. ஆனால், நன்றாக ஓடும், நன்றாக நீந்தும்.



பறவைகளைத்தவிர வேறு சில பிராணிகளும் பறக்கின்றன. இவற்றுக்கு இறக்கைகள் இல்லாவிட்டாலும், உடலில் உள்ள மெல்லிய தோல் மடிப்புகள் இறக்கைகள் போல் உதவுகின்றன. இந்தியக் காடுகளில் பறக்கும் அணில்கள் இருக்கின்றன. பறக்கும் அணிலின் உடலில் நான்கு கால்களையும் இணைத்துத் தோல் மடிப்புகள் இருக்கின்றன. ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குத் தாவும்போது, இந்த மடிப்புகள் விரிந்துகொண்டு, அணில், காற்றில் மிதந்தபடி சுமார் 74 மீட்டர் தூரம் போகும்!



மலேசியாவிலுள்ள 'லெமூர்' என்னும் சிறு பிராணியும் பறக்கும். இதன் விலாப் பக்கமும், நான்கு கால்களும், விரல்களும், வாலும் மெல்லிய தோலால் இணைக்கப் பட்டிருக்கின்றன. இந்தத் தோலை விரித்துச் சிறிது தூரம் தாவிப் பறக்கும் லெமூர்!




சுமத்ரா, ஜாவா தீவுகளில் 'ரகோ போரஸ்' என்னும் 'பறக்கும் தவளைகள்' இருக்கின்றன. தவளையின் நான்கு கால் விரல்களையும் துடுப்பு போன்று அவ்வு இணைத்துள்ளது. இதன் உதவியால், மரம் விட்டு மரம் தாவிப் பறக்கிறது தவளை!


'டிராகோ' என்னும் பறக்கும் பல்லிகள் இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ளன. விலாப் பக்கம் மடக்கி விரிக்கக் கூடிய தோல் அமைப்பினால் இவை தாவிப் பறக்கின்றன!



மலேசியா, ஜாவா ஆகிய நாடுகளில் 'க்ரிஸோப்லியா' என்னும் பறக்கும் பாம்புகள் உள்ளன. இவை மரத்திற்கு மரம் தாவிப் பறக்கும் போது, விலாப் பகுதிகளைப் பட்டையாக அகலப் படுத்திக் கொள்ளுகின்றன.



'எக்ஸோ கோடஸ்' என்னும் பறக்கும் மீன்கள் இருக்கின்றன. உந்து சக்தியினால் இவற்றின் விலாப்பக்கம் உள்ள பெரிய துடுப்புகள் இறக்கைகள் போல் விரிந்து சுமார் 46 மீட்டர் தூரம் தாவுகின்றன!



மருந்துக்கு ஏற்ற நோட்டு!

பேருந்து நிலையத்தில் இருந்த மருந்துக் கடை. "இந்த மருந்தைக் கொடுங்க" என்று மருந்துச் சீட்டையும் நூறு ரூபாய் நோட்டையும் நீட்டினார் ஒருவர்.

சீட்டைக் கையிலும், நோட்டை கவுண்டர் மேசையிலும் வைத்த சின்னப் பையன் மருந்தோடு, ரூபாய் பதினொன்று, ஐம்பது பைசா போக மீதிப் பணத்தை சில்லரையோடு கவுண்டர் மேசையிலேயே வைத்தான். நூறு ரூபாய் தாளை மேசை டிராயரை இழுத்து உள்ளே போட்டான்.

"என்னப்பா, சில்லரை கேட்காம நீ பாட்டுக்கு பத்து ரூபா மருந்துக்கு நூறு ரூபாய்க்கு சில்லரை கொடுக்கறியே?" என்றார் முதலாளி கடுப்புடன்.

'அவரிடம் சில்லரை இல்லையாம்' கண்சிமிட்டி பதில் கூறினான் சின்னப் பையன். ஏதோ சின்னப் பையனுக்குத் தெரிந்த பார்ட்டி என முதலாளி தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டார்.

பார்ட்டி சென்றவுடன் தனக்கிருந்த சந்தேகத்தைத் தீர்க்க முதலாளி முயன்ற போது, சின்னப் பையன் சொன்னான், 'அந்த மருந்து காலாவதி ஆயிட்டதுங்க. யாருமே வாங்க மாட்டாங்க. அதனால அதை இந்த பார்ட்டி தலைல கட்டிட்டேன். பில் கூடப் போடலே. பிரச்னை ஏதும் வராது. பஸ்டாண்டு கடைங்கிறதுனால இதுதான் வசதி. மருந்து வாங்கின பார்ட்டி இந் நேரம் எந்த ஊர் பஸ்ஸைப் பிடிச்சி போய்கிட்டிருக்கானோ?' என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தான் சின்னப் பையன். முதலாளி மனத்திற்குள் ஒரே மகிழ்ச்சி!

டெலிபோன் மணியின் கிணி கிணி சத்தத்தை பாதியில் நிறுத்தி ஹலோ சொன்ன சின்னப் பையனிடம் பெரிய முதலாளி பேசினார். "நான் பிரசாத் பேசறேன், இப்பத்தான் சி.ஐ.டி. ஆபீஸ்லேயிருந்து தகவல் வந்தது. நம்ம ஊரிலே 9FU873244 என்ற நம்பர் வரிசை உள்ள புது நூறு ரூபாய் கள்ள நோட்டுங்க புழக்கத்துக்கு வந்திருக்குதாம்! அதுவும் கூட டவுனை சுற்றியுள்ள ஊர்லதான் இருக்குதாம். அதனால பஸ்டாண்டுல கடை வச்சிருக்கிற நீ பார்த்து கவுண்டர்ல நூறு ரூபாய் நோட்டை வாங்கு" என்றார்.

சின்னப் பையன் அவசரம் அவசரமாக மேசைக்குள் இருந்த புது நோட்டை எடுத்துப் பரபரப்புடன்




பார்த்தான். சந்தேகமே இல்லை! பெரிய முதலாளி சொன்ன அதே வரிசை நோட்டுதான்! கள்ள நோட்டைக் கொடுத்தவன் 5, 6 கிலோ மீட்டர் தாண்டி பஸ்ஸில் போய் கொண்டிருந்தான், காலாவதியான மருந்துடன்!

— மு. தனகோபாலன்

ஒரு காலத்தில் ஹங்கேரி நாட்டுக்கும் வேறொரு நாட்டுக்கும் போர் மூண்டது. கவச வாகனங்களும், குண்டுகளும் அப்போது கிடையாது. வீரர்கள் கையில் ஈட்டி அல்லது வாள் ஏந்திக் குதிரை மீதேறிச் சண்டை செய்வார்கள்.

போரிடும் இடங்களில் வீரர்களுக்கு உணவு தேவைப்படுவது போல், குதிரைகளுக்கும் கொள்ளு அல்லது புல் தேவைப்படும். அப்போதெல்லாம் வீரர்கள் தங்கள் குதிரைகளை எதிரிகளின் வயல்களில் மேயவிட்டு விடுவார்கள்.



இதற்காகவா..?

ஹங்கேரியின் உயர் ராணுவ அதிகாரி ஒருவர் தனது குதிரையை மேய விடுவதற்காக நல்ல செழிப்பான வயலுக்காக அலைந்தார்.

வழியில் ஒரு குடியானவன் நின்று கொண்டிருந்தார். அவரிடம் அதிகாரி மிகுந்த ஆணவத்துடன், "விவசாயிக் கிழவரே!" என்று அவரை அருகில் அழைத்தார். கிழவர் பணிவாக வந்தார்.

"என் குதிரைக்கு நல்ல பசுமைப் புல் தேவை. சத்துள்ள பசும் பயிர் எந்த வயலில் உள்ளது...? போய்ப் பார்த்து வா. அதில் என் குதிரையை மேய விட வேண்டும்..." என்றார்.

"அப்படியே ஐயா!" என்ற கிழவர், சற்று தூரம் சென்று, சாலையில் நின்றவாறு வயல்வெளியை உற்றுப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தார்.

"ஐயா... என்னுடன் கிளம்பி வாருங்கள். நான் உமக்கு நல்ல விளைச்சல் உள்ள வயலைக் காட்டுகிறேன்..." என்றவாறு முன்னே நடந்தார்.

அதிகாரி அவரைப் பின்தொடர்ந்தார்.



இருவரும் பல வயல்களைக் கடந்து சென்றனர். அவ்வயல்கள் எல்லாவற்றிலுமே பயிர்கள் தளதளவென்றுதான் செழித்திருந்தன. எனினும், அவற்றில் குதிரையை மேயவிடச் சொல்லாமல், கிழவர் போய்க் கொண்டே இருந்தார்.

கடைசியாக ஒரு வயலில் போய் நின்ற அவர், "ஐயா! இந்த வயலின் பயிர்கள் பசுமையாக உள்ளன. இதில் உங்கள் குதிரையை மேயவிடுங்கள்" என்றார், பணிவுடன்.

அந்த அதிகாரி தன் குதிரையை அவ்வயலினுள் விரட்டி மேயவிட்டு விட்டுத் தான் மட்டும் வரப்பில் நின்றார்.

குதிரை பசும் பயிரை வயிறு நிறைய மேய்ந்தது. தின்றது பாதி; மிதித்து அழித்தது பாதி என்று வயலின் பயிர் முழுவதும் நாசமாகி விட்டது.

கடைசியில், கிளம்பும்போது அந்த அதிகாரியின் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. அந்த விவசாயி காட்டிய வயலின் பயிர் அப்படி ஒன்றும் தனிச்சிறப்பு மிக்கதாகத் தெரியவில்லை. அவையும் மற்ற வயல்களைப் போலவேதான் இருந்தன.

எனவே, அதிகாரி விவசாயியிடம், "அறிவுகெட்ட முட்டாள்

ஜானகி மணாளன்

விவசாயியே...! இந்த வயலில் உள்ளதைப் போன்றுதானே நாம் கடந்து வந்த எல்லா வயல்களிலும் பயிர்கள் பசுமையாக உள்ளன...? எதற்காக என்னை இத்தனை தூரம் நடத்தி அழைத்து வந்தாய்? வீண் வேலைதானே...?" என்று கடிந்து கொண்டார்.


விவசாயி அமைதியாகச் சொன்னார். "ஐயா, அதிகாரி அவர்களே...! எங்கள் நாடு உங்களிடம் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறது... அப்படியிருக்கும் போது, உங்கள் குதிரையை மேயவிடுவதற்கு எங்களுக்கு நீங்கள் பணமா தரப் போகிறீர்கள்? இல்லையே...! அப்படியிருக்கப் பிறருடைய வயலை நான் ஏன் சுட்டிக்காட்ட வேண்டும்? அவர்களை நஷ்டம் அடையச் செய்வது முறையல்லவே...? எனக்கு ஏது அந்த உரிமை...? எனவேதான், வரும் நஷ்டம் என்னுடன் போகட்டும் என்று மற்றவர்களது வயலைச் சுட்டிக்காட்டாமல், எனக்குச் சொந்தமான என்னுடைய வயலையே காட்டி, குதிரையை மேயவிடஅழைத்துப் போனேன்" என்றார் விவசாயி.

அதிகாரிக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை.

கிழவர் தொடர்ந்தார். "உண்மை இதுதான் ஐயா. வீணில் உங்களை இத்தனை தூரம் நடக்கச் செய்ய வேண்டும் என்பது என்னுடைய நோக்கமல்ல... தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்..." என்றார் அவர் பணிவுடன்.

அதிகாரி வெட்கித் தலைகுனிந்தார். பிறர் பொருளின் மீது, அந்த விவசாயி பெருமதிப்பு வைத்திருக்கும்போது, தான் மட்டும் பிறர் சொத்தின் மீது துளியும் மதிப்பு வைக்காமல் குதிரையை மேயவிட்டதை எண்ணி வருந்தினார். அதற்குப் பிராயச்சித்தமாகத் தன் குதிரை அந்த விவசாயியின் வயலில் மேய்ந்த பயிரின் மதிப்பை விடப் பல மடங்கு பணத்தை விவசாயிக்கு வழங்கிவிட்டு அவரிடமிருந்து அன்போடு விடைபெற்றார்.

இன்றைக்கு எனக்கு தொண்டை கட்டி விட்டது. குரைக்க முடியாது அதான் இந்த ஏற்பாடு...!




எங்கள் ஊரில் நடந்தது!



எல்லாமே நல்ல சிலைதான்!

கிராமத்து மனிதர் ஒருவர் தன் மகன் எப்படிப் படிக்கிறான் என்பதை அறிய பள்ளிக்குப் போனார். வேலை நேரம் ஆதலால் பள்ளிக்குள் அனுமதிக்க




வில்லை. அதனால் அருகே இருந்த டீ கடைக்குப் போனார். அங்கு வேலை பார்க்கும் சிறுவனிடம், "இங்கே எட்டாங்கிளாஸ் எப்படி? நல்ல கிளாஸ் தானா?" என்று கேட்டார். அந்தச் சிறுவன் "எல்லாக் கிளாசுமே நல்ல கிளாஸ்தான். எந்த கிளாஸ்ல வேண்டுமானாலும் டீ குடிச்சுப் பாருங்க" என்றான். கிராமத்து மனிதர் கிளாஸ் என்பதை வகுப்பு என்பதற்காகக் குறிப்பிடுகிறார் என்பது அவனுக்குத் தெரியவில்லை. தன்னுடைய கடை டீ கிளாஸைத்தான் குறிக்கிறார் என்று அவன் எண்ணி விட்டான்!

அனந்தபுரம், கே. ராவணன்.

மடக்கை

எங்கள் கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அன்றய தலைப்பு "மடக்கை" பற்றியது. விளக்க



மெல்லாம் முடிந்த பிறகு கேள்வி கேட்க ஆரம்பித்தபோதுதான் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த ஒருவன் அவர் கண்ணில் பட்டு விட்டான். அவனைத் தட்டி எழுப்பி, "மடக்கை என்றால் என்ன?" என்று கேட்டார். சற்றும் அயராத அவன், "கையை மடக்கி வைத்துக் கொள்வதே மடக்கை" என்றான். எல்லோரும் சிரித்தோம், அடிக்கத் தயாரான ஆசிரியர் உட்பட!

வெள்ளையாம்பட்டு, கே. அனந்த செயன்.

கால்சட்டையே இல்லையானால்...?

நான் தேவகோட்டையிலிருந்து காரைக்குடிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். என் அக்கா பையன் பழநிக்கு 4½ வயது இருக்கும். அவனும் என்னுடன்




வருகிறேன் என்று அடம்பிடித்தான். "நீ நல்ல உடை அணிந்துவா அழைத்துச் செல்கிறேன். பஸ்ஸுக்கு நேரமாகி விட்டது" என்றேன். அவன் துள்ளிக் குதித்துக் கொண்டு என் அக்காவிடம் போய், "பாண்ட், சட்டை தாருங்கள். சித்தியுடன் காரைக்குடி போகிறேன்" என்றான். அக்கா புது கால்சட்டை ஒன்றையும், சட்டை ஒன்றையும் கொடுத்து, "போட்டுக் கொண்டு போ" என்று கூறினார். பழநி, "எனக்குக் கால்சட்டை வேண்டாம். பாண்ட்தான் வேண்டும்" என்று படுத்துப் புரண்டு அழுது அடம் பிடிக்கத் தொடங்கினான். என் அக்கா, "டேய், நீமுழு பாண்ட் போட்டுக்கிட்டுப் போனால், கண்டக்டர் முழு டிக்கெட்டுக்குக் காசு கேட்பார். நீ அரைகால் சட்டை போட்டுக் கொண்டு போனால் அரை டிக்கெட்டுக்குத்தான் காசு வாங்கிக் கொள்வார். அடம்பிடிக்காமல் எழுந்து போ" என்றார். அக்கா வேறு ஆடை தர மாட்டார் என்று நன்கு தெரிந்து கொண்ட அவன் அழுகையை நிறுத்தி விட்டு, விறுவிறு என்று என் அக்காவின் அருகில் போய் நின்றான். "ஏன் அம்மா, நான் முழு பாண்ட் போட்டுக்கிட்டுப் போனால் முழு டிக்கெட்டுக்கு காசு கேட்பார். அரைக்கால் சட்டை போட்டுக்கிட்டுப் போனால் அரை டிக்கெட் கேட்பார். ஆனால், கால் சட்டையே போட்டுக் கொள்ளாமல் போனால், டிக்கெட்டே கேட்கமாட்டார் இல்லையா?" என்றானே பார்க்கலாம். வீட்டிலுள்ள அனைவரும் சிரித்து விட்டோம்.

சிங்கப்பூர், மீனாதேவராஜன்,
(தொடர்பு முகவரி இல்லை)

டிக்கெட்?

நானும், என் நண்பனும் பள்ளிக்குச் செல்ல பேருந்தில் ஏறினோம். பேருந்திலுள்ள கண்டக்டர், பயணிகளிடம்,




"டிக்கட், டிக்கட்" என்றவாறே எங்களிடம் வந்து, என் நண்பனைப் பார்த்து, "தம்பி, "டிக்கட்?" என்றார். உடனே என் நண்பன் (கிண்டலாக) "டிக்கட் உங்களிடம் தானே உள்ளது? ஏன் எங்களைக் கேட்கிறீர்கள்?" என்றதும் பேருந்தில் இருந்த அனைவரும் சிரிப்பில் மூழ்கினோம்.

வரிக்கல் கிராமம், த. பழனி

ஒட்டி அனுப்பிய ஜோக்

நாங்கள் (அதாவது) நானும் என் அக்காவும் அடிக்கடி தினசரி பத்திரிகைகளுக்கு தமாஷ் எழுதுவோம். அவை தினமும் பத்திரிகைகளில் பிரசுரம் ஆகும். அவைகளை அண்டை அயலாரிடம்



காட்டி மகிழ்வோம். இதை தினமும் காணும் எனது தம்பிக்குப் பொறாமையாக இருக்கும். ஆனால் அவனுக்குக் கையெழுத்து அழகாக இல்லாததால், அவன் எழுதி அனுப்புவதில்லை. என்றுமே பத்திரிகையில் தமாஷ் பகுதியை கவனிக்காத அவன் ஒருமுறை பத்திரிகையில் தமாஷ் பகுதியை கவனமாகப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவனை என்ன விஷயம் என்று கேட்டதற்கு நான் ஒரு புத்தகத்தில் இருந்த தமாஷை வெட்டி அனுப்பியிருந்தேன். அது வந்ததா என்று பார்த்தேன் என்று சொன்னானே பார்க்கலாம். அனைவரும் கொல்லென்று சிரித்தோம்.

ஆட்டையாம்பட்டி, பி.விஜயகுமார்.

ஆத்தி! காடு!

எங்கள் ஊரான நெற்குப்பைக்கு அருகில் ஆத்திக்காடு என்ற ஊர் உள்ளது.



நானும் ஆத்திக்காடுக்கு பிரயாணம் செய்தேன். ஆத்திக்காடு வந்ததும், கண்டக்டர் ''ஆத்திக்காடு வந்துருச்சு இறங்கு'' என்றார். நானும் குறும்புடன்... ''ஆத்தி! காடு! நான் இறங்க மாட்டேன்'' என்று சொல்ல பஸ்ஸில் சிரிப்பலை எழுந்தது.

நெற்குப்பை, கி. மனோகரன்.

சிக்கனம்!

ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்தார். எப்பொழுதும் போல் பாடம் நடத்த ஆரம்பித்து சிக்கனத்தைப் பற்றி விளக்கிக்



கொண்டிருந்தார். பாடத்தை முடித்து விட்டு நாளைக்கு வரும் பொழுது சிக்கனத்தைப் பற்றிக் கட்டுரை எழுதிக் கொண்டு வர வேண்டும் என்று கூறினார். மறுநாள் ஒரு மாணவன் மட்டும் எழுதிக் கொண்டு வரவில்லை. 'ஐயா நான் பேனாவையும், நோட்டையும் சிக்கனப்படுத்தி விட்டேன்'' என்று அவன் கூறியவுடன் அனைவரும் சிரித்தோம்.

வெண்ணையாம்பட்டு, டி. ஜெகன்.

நூல் கொண்டு வந்தியா?

எங்கள் வகுப்பு தமிழ் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். வகுப்பில் அனைவரும் தமிழில்தான் பேச வேண்டும் என்றும் தவறி ஆங்கிலத்தில் பேசி விட்டால், அதற்கான தமிழ்ச் சொல்லை




இருபது முறை இம்போசிஷன் எழுதும்படி தண்டனை வைப்பார். ஒருமுறை ஆசிரியர், மாணவர்களிடம் 'நாளை வரும் போது அனைவர் கையிலும் நூல் இருக்க வேண்டும்' என்றார். மறுநாள் ஒரு மாணவனை எழுப்பி 'நூல் கொண்டுவந்தியா?' என்று கேட்டார். அந்தக் குறும்புகார

மாணவன் கொண்டு வந்தேன் சார்' என்று சட்டைப் பாக்கெட்டிலிருந்து துணி தைக்கும் நூலை எடுத்துக் கொடுத்தான். மாணவர்கள் அனைவரும், ஆசிரியர் உட்பட சிரித்து விட்டோம்.


திருப்பத்தூர், தே. இளங்குமரன்.

காது அறுந்தது!

ஒருநாள் எங்களுக்கு மதியம் பள்ளி இருந்தது. அன்றைக்கு நாங்கள் அனைவரும் சைக்கிள் எடுத்து வந்தோம். சைக்கிளை கிரவுண்டில் நிறுத்தினோம். ஒருவனின் பையின் கைப்பிடி அறுந்து விட்டது என்று சொல்வதற்குப் பதில் "காது அறுந்து விட்டது" என்று சொன்னான். அவன் பக்கத்தில் இருந்த நண்பர்கள் அனைவரும் அவன் காதைப் பார்த்தனர். "ஏன்டா காது நல்லா முழுசாத் தானே இருக்கு!" என்று கேட்டனர். அனைவரும் சிரித்தனர். அவனைத் தவிர.



செஞ்சி, தா. ரோஜர்




முதலமைச்சரானால்

சமூகவியல் ஆசிரியர், மாணவர்களைப் பார்த்து நீங்கள் முதலமைச்சரானால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். எல்லா மாணவர்களும் நான் வறுமையைப் போக்குவேன். வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பேன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தனர். ஒரு மாணவன் மட்டும் "நான் முதலமைச்சரானால் வாரத்திற்கு இரண்டு ஞாயிற்றுக் கிழமை வரும்படி உத்தரவிட்டு மாணவர்களுக்கு நல்லது செய்வேன்" என்று கூற வகுப்பே சிரிப்பு மயமாகியது.

வந்தவாசி, பா.ஜெயக்குமார்

பொண்ணு காணாமல் போகுமா?

குடும்பத்துடன் கோயில் திருவிழாவிற்குச் சென்றிருந்தோம். கூட்டத்தில் யாரும் காணாமல் போய்விடக் கூடாதென்று ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி சென்று சாமிகும்பிட்டு வந்தோம். எங்களுடன் அக்கா பையன் சுட்டிப் பயல் பாலகுமாரும் வந்தான். அவன் கையை நான் பிடித்து வந்தேன். சமீபத்தில் ஒரு திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தோம். நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணம். பாலகுமாரும் வந்திருந்தான். நாங்கள் அனைவரும் முதல் வரிசையில் அமர்ந்திருந்தோம். திருமணம் முடிந்து மாப்பிள்ளை பெண்ணின் கையைப்




பிடித்து அக்கினியைச் சுற்றி வரும் போது, அருகில் இருந்த பாலகுமார், "மாமா, பொண்ணு காணாமல் போய் விடும்னு மாப்பிள்ளை பொண்ணு கையைப் பிடித்துக் கொண்டு வருகிறார் பார்! இந்தக் கூட்டதிலா பொண்ணு காணாமல் போகும்?'' என்றானே பார்க்கலாம். அனைவரும் சிரித்து விட்டனர்.

மேலப்பாதி, எஸ். நாகராஜன்

பிள்ளையார் தப்பினார்!

வழக்கம் போல் நானும் எனது நண்பனும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தோம். போகும் வழியில் பிள்ளை




யார் கோவில். அந்தக் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டுத்தான் பள்ளிக்குச் செல்வோம். எங்களுடன் சோமுவும் வந்தான். வந்தவன் எங்களுடன் சாமிகும்பிடாமல் என்னவோ தேடினான். "என்னடா தேடறே?" என்று நண்பன் கேட்டான். "எங்கம்மா பிள்ளையார் தலைல பாரத்தைப் போட்டுட்டு பரீட்சை எழுது என்று சொன்னாங்க. அதான் பாரமா ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கிறேன்" என்றான் அந்த அப்பாவி! நாங்கள் அவன் அம்மா கூறிய உண்மைப் பொருளை விளக்கினோம். நல்லகாலம் பிள்ளையார் தப்பித்தார்!

கீரனூர், பி. பெரியசாமி.

இரண்டு காது ஏன்?

அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக்



கொண்டிருந்தார். அன்று உடலியல்பாடம். நடத்தி முடித்ததும் "நமக்கு ஏன் இரண்டு காது இருக்கிறது?''என்று ஒரு மாணவனிடம் கேட்டார். அவன் யோசித்து விட்டு, "ஒரு காது சொல்றதைக் கேட்க சார். இன்னொரு காது கேட்டதை வெளியே விடறதுக்கு சார்'' என்றான். வகுப்பறையே 'கொல்' சிரிப்பில் மிதந்தது.


வெள்ளையாம்பட்டு

கே.விஜய்.அனந்த்.

"பெரியவனானதும் என்ன பண்ணுவே?"

"பெரிய ஆளாகி பாதுகாப்புக்கு மனிதப் படை வைச்சுப்பேன்."

- சி. சங்கர், பானாம்பட்டு.



எத்தனை



யானைகள்?

நல்லமுத்து குடையை ரிப்பேர் செய்து கொண்டு கிளம்பும்போது மழை பலமாகப் பிடித்துக் கொண்டது. "எத்தனை நேர மானாலும் பரவாயில்லை. இருந்து குடையை ரிப்பேர் பண்ணிக் கையோடு வாங்கிக் கொண்டு வா. காலையில் காய்கறி வாங்க மார்க்கெட்டுக்குப் போக அவசியம் வேண் டும்" என்று அப்பா கூறியிருந்தார். அதனால் தான் பள்ளி விட்டதும் கடையில் காத்திருந்து ரிப்பேர் பண்ணி வாங்கிக் கொண்டு கிளம்பினான் நல்லமுத்து.

சின்னக் கடைவீதியைத் தாண்டும் போது மழை வலுத்து விட்டது. மைதா னத்தின் ஓரத்தில் கல்யாண சத்திரம். அதில் ஒரு கூட்டம் மழைக்கு ஒதுங்கி யிருந்தது. அந்தக் கும்பலில் இருந்து "நல்லமுத்து நல்லமுத்து" என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. நல்ல முத்து திரும்பிப் பார்த்தான். பெரிய சாமித் தாத்தாதான்.

நல்லமுத்து வீட்டுக்கு மூன்றாவது வீடுதான் பெரியசாமித் தாத்தாவின் வீடு.

"தம்பி, நானும் உன்னோடு வரேன்," என்று குரல் கொடுத்தார் தாத்தா.

மழை பயங்கரமாக வலுத்து விட் டது. தெருவில் மழைநீர் வெள்ளமாக ஓட ஆரம்பித்து விட்டது. நல்லமுத்து முழங்கால் நீரில் சத்திரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.


மழை நீரில் வேகமாக வந்த கார் ஒன்று அவனுக்கு முன்னால் வந்து நின்றது. காரை ஓட்டி வந்தவர் நல்லமுத்துவின் குடும்ப நண்பரான டாக்டர் சுப்பையா. பலமுறை காரை ஸ்டார்ட் செய்ய முயன்றும் கார் மக்கர் பண்ணியது. அலுத்துப்போன டாக் டர் குடையுடன் நின்றிருந்த நல்லமுத்து வைப் பார்த்து விட்டார்.

"நல்லமுத்து நல்ல சமயத்துக்கு வந்தே. அவசர கேஸ். பக்கத்துத்துத் தெருதான். கொஞ்சம் குடையோடு வா. நடந்து போயிட லாம்" என்று டாக்டர் அழைத்தார்.

"தம்பி, குளிருதப்பா. என்னையும் கூட்டிக் கிட்டுப் போப்பா" என்று மறுபடி குரல் கொடுத்தார் பெரியசாமித் தாத்தா.

"நல்லமுத்து நல்லமுத்து. நல்லசமயத்துக்கு வந்தே. விடைத்தான் கட்டு மழையில நனைஞ்சுடுமேன்னு இருந்தேன். வா, என்னை வீட்டுல விட்டுட்டுப் போ" என்று எதிர்ப்பக்கக் கடையில் இருந்து குரல் கொடுத்தார் நல்லமுத்துவின் வகுப்பாசிரியர்.

நல்லமுத்துவின் குடை இருவரை மட் டுமே தாங்கும். மழை விடாமல் கொட்டியது. நல்லமுத்துவின் நிலையில் இருந்தால் நீங்கள் என்ன பண்ணுவீர்கள்? யாரை முதலில்



நீங்களாக இருந்தால்?

போட்டி

குடையில் கூட்டிக் கொண்டு போவீர்கள்? தாத் தாவையா, டாக்டரையா, வகுப்பாசிரி யரையா? உங்கள் பதிலை உரிய காரணங் களோடு எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்பி வையுங்கள். சிறந்த பதில் எழுதுவோருக்குப் பரிசு உண்டு. முடிவு தேதி 31.1.97. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பாகாது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. பரிசு பெறாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

சார் தபால்!

✉ நீண்ட நாட்களுக்குப் பிறகு வெளிவந்துள்ள ஆழியின் 'ஒலியும் கேட்டலும்' பிரமிப்பாக இருந்தது! – வாலாஜா சி. தண்ணீர்மலை, திருத்தணி மு. கிருபாகரன், சுவாமிமலை நா. வயிரவன், சின்னசேலம் ஆர். பிரசன்னா, பிரபாகர், விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், செம்பனார் கோயில் ஜெ. சுஜாதா, கபிஸ்தலம் ஜி. சுரேஷ்குமார்.

✉ ஏன் சார் இப்படி போட்ட ஜோக்கையே போட்டு அறுக்கிறீர்கள்? – திருநின்றவூர் மா. சுமதி, காட்பாடி என். திரௌபதி, பெங்களூர் மா. சுந்தர்பாபு.

✉ 'கிறிஸ்மஸ் பரிசு' சிறுகதை நெஞ்சை நெருடிக் கலங்க வைத்தது! – திண்டிவனம் மா. பிரபு, கடலூர் து. கண்ணம்மை, விருத்தாசலம் வி. பிரபாகர், மேலப்பாதி என். ராஜலட்சுமி, செம்பனார்கோயில் ஜெ. ஜெம்மு, காப்பரத்தாம்பட்டி கே. ராஜாதிருவேங்கடம், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன்.

✉ கொக்கு உட்காரும் இடம் விலை மதிப்புமிக்கது என்ற நம்பிக்கை புதிதாக இருந்தது 'உப்புப் பிறந்த கதை'யில்! – விருதுநகர் சா. முத்தலிப், பன்னத்தூர் இரா. சங்கரையா, மேலப்பாதி என். ராஜலட்சுமி.

✉ 'உரக்கப் படிக்க உன்னதக் கதைகள்' உண்மையாகவே உன்னதமாக உள்ளன. எங்கள் தாத்தா எழுத்துக் கூட்டி உரக்கப் படித்து ஆனந்திக்கிறார்! – பரமலை வா. பஞ்சாபிகேசன், நாகமலை வி. தாமரை, பெரியபாளையம் என். சங்கரி, திண்ணப்பட்டி வி. பெரியசாமி, வடக்கநந்தல் எஸ். வெங்கடேசன்.

✉ கோகுலம் வந்ததும் முதலில் படிப்பது 'சின்னபாபு'வின் கதையைத்தான்! நிஜமாகவே பயமாக இருக்கிறது! – வேலூர் இரா. கிருஷ்ணா, ஆற்காடு நா. விசாலம், திருமலை என். கருணாகரன், ஈரோடு தூ. எமிலா ஜோசப், விருத்தா சலம் வி. பிரபாகர், கபிஸ் தலம் என். வினோத் பாபு, கபிஸ்தலம் ஜி. சுரேஷ்குமார்.


✉ 'கழுகு பறவைகளின் அரசனா?' – அசத்தலான கதை! பாடநூல்களால் கூடத் தர இயலாத விலங்கியல் உண்மைகளைத் தொடர்ந்து கோகுலம் தருவது பெரிய தொண்டு! – திருச்சி வா. மலையப்பன், மதுராந்தகம் எஸ். சின்னியப்பன், திருமலையூர் சி. ராதிகா, நல்லாலம் சி. தாயப்பன், சென்னிமலை தா. நாகரத்னம், கோவை என். மாலதி, காரை இரா. அன்புமணி, ராணிப்பேட்டை எஸ். சுந்தரபாபு, திருச்சி ராஜிராதா, மேலப்பாதி எஸ். நாகராஜன், சென்னை – 15 ஜி. கே. வெண்ணிலா, கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், செம்பனார் கோயில் எம். ஜெயபாலன், காப்பரத்தாம்பட்டி கே. ராஜா திருவேங்கடம், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன்.

✉ 'இங்கேயே படிக்கிறேன்' எல்லாச் சிறுவர்களும் அவசியம் படிக்க வேண்டிய அருமையான படைப்பு. பலருடைய கண்களைத் திறக்க வைக்கக்கூடியது என்னையும் சேர்த்து! – தாராபுரம் வி. சம்பந்தமூர்த்தி, சிவகங்கை. எஸ். நாராயணன், மாயூரம் மு. பூபாலன், சென்னை – 15, ஜி.கே. வெண்ணிலா, திருச்சுழி சுந்தர் அழகேசன்.

✉ ராஜாஜியின் கதை உழைப்பின் அருமையை; அவசியத்தை அருமையாக விளக்கியது. காலத்தைக் கடந்து நிற்கவல்ல கதை! – சாத்தூர் வி. மனோரஞ்சிதம், தூத்துக்குடி சு. அடைக்கலம், விருத்தாசலம் வி. பிரபாகர், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், செம்பனார்கோயில் ஜெ. ஜெம்மு, தஞ்சை ஆர். புவனா, காப்பரத்தாம்பட்டி கே. ராஜா திருவேங்கடம், கபிஸ்தலம் ஜி. சுரேஷ்குமார், வேலூர் சித்ரா.

✉ 'அரசகுமாரனும் மூன்று அற்புதப் பொருள்களும்' படக்கதை, திரைப்படம் போல் அழகாக இருந்தது! கருத்தும், படமும் பலே பலே! - அரசூர் இ. சுப்புரத்னம், தரங்கை இ. மாணிக்கவள்ளி, காங்கேயம் கி. வானமாமலை, நாமக்கல் சு. பத்மாவதி, விருத்தாசலம் வி. பிரபாகர், மேலப்பாதி எஸ். நாகராஜன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, காப்பரத்தாம்பட்டி கே. ராஜாதிருவேங்கடம், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன்.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.



YO!

Pretty girls 'n freaky boys it's time you got these groovy toys.



Bol baby bol, rock 'n'roll!

A fabulous 3-in-1. Happy b'day tune. Mini keyboard with 11 piano keys. Rap music with 5 rap sounds.

Wanna listen to rangeela?

Presenting 'My own band'. Realistic beats. Disco lights. Four rap sounds - rattle drum, side drum, bass drum and cymbals. Composes simple tunes.





Mom, there's a cake in my piano!

Birthday Cake Piano. Play the birthday song as you celebrate. 13 keys. Accurate musical scale. Perfect tones.

Kapil and Sachin have a secret to say!



Talking Pocketable Phone. Listen to what Sachin and Kaps have to say about cricket. Real telephone sound. Musical push-key functions.

MUM TOYS

M M Toys Industries Ltd

5, Chandra Bagh Avenue, Chennai 600 004

HTA.7504.97

Available at all leading toy shops and fancy stores

Give your friends a moment to cherish. Write to us for free greeting cards

Registered with the Registrar of Newspaper of India Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

